Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி–19 | 03–08–2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை –167

கணேசா நகை மாளிகை

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
இல:123, பஜார் வீதி, வவுனியா. T.P.-024-2222464
இல:194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.-021-2225987
(சி-10122)

# வேலையற்ற பட்டதாரிகளின் மறியலால்

# யாழ். செயலக நடவடிக்கைகள் பாதிப்பு

## அரச அதிபரிடம் மகஜர் சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

**பட்டதாரிகள் நியமனத்தில் இடம்பெற்ற முறைகேடுகளைக் கண்டித்து யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் அடையாள மறியற்போராட்டமொன்றை நேற்று யாழ். செயலகம் முன்பாக மேற்கொண்டது. இதனால் செயலக நடவடிக்கைகள் பாதிப்படைந்தன. போராட்டத்தின் முடிவில் யாழ். அரச அதிப ரிடம் மகஜர் ஒன்றும் சமர்ப் பிக்கப்பட்டது.**

காலை 8 மணியளவில் செயல கத்தின் கண்டிவீதியிலுள்ள பிர தான நுழைவாயில்களில் திரண்ட பட்டதாரிகள் மு.பகல் 10.00 மணி வரை இம்மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் யாழ் செயலக வளவினுள் பணியாளர்கள் எவரும் செல்லமுடியாது பணிகள் ஸ்தம்பிதமடைந்தன.


போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பட்டதாரிகளுக்கு ஆதரவாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர்களான கே.சிவாஜிலிங்கம், ந.ரவிராஜ், சி.கஜேந்திரன் மற்றும் சி.சிவனேசன், பத்மினி சிதம்பர நாதன் ஆகியோரும் அங்கு வருகை தந்திருந்தனர்.

பட்டதாரிகளாக வெளியேறிய கால மூப்பின் அடிப்படையில் நிய மனம் வழங்கக்கோரியும், அங்கீ கரிக்கப்பட்ட உயர் தொழில் நுட்ப கல்வியகப் பட்டதாரிகளை சேவை யில் உள்ளீர்த்தல் மற்றும் விடு தலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியினைச் சேர்ந்த பட்டதாரி களுக்கு நியமனம் வழங்குதல் ஆகியன அடிப்படையில் கோரிக்கை களை முன்வைத்தே இப்போ டத்தை அவர்கள் முன்னெடுத்திருந் தனர்.

இதனிடையே யாழ்.செயல கத்திற்கு அலுவலக வாகனத்தில் வருகை தந்த யாழ். அரச அதி பரை நுழைவாயிலூடாக உட்

(12ஆம் பக்கம் பார்க்க)



யாழ். அரச செயலகம் முன் சுலோக அட்டைகளுடன் மறியலில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளையும், அவர்கள் அரச அதிபரைச் சூழ்ந்து நிற்பதையும் மேலுள்ள படங்களில் காணலாம். (படம் : தீபன்)

# கிளி.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் இன்று அரச செயலகம் முன் மறியல்

## வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

அரசினால் வழங்கப்பட்ட வேலையற்ற பட்டதாரிகளின் அரச துறை வேலைவாய்ப்பு நியமனங் களில் புறக்கணிக்கப்பட்ட கிளி. மாவட்ட பட்டதாரிகள் இன்று மறி யற்போராட்டத்தில் ஈடுபடவுள்ள னர்.

இன்று கிளி.அரச செயலக முன் பாக மேற்படி மறியற்போராட்டம் இடம் பெறவுள்ளதென கிளி. மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

பட்டதாரிகளுக்கு அரச துறை களில் வேலைவாய்ப்பு வழங்கப்படு வதாக உறுதிமொழி அளித்த அரசு பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும்போது விடுதலை புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பட்ட தாரிகளை முற்றாகப் புறக்கணித் ததற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் முக மாகவே இம் மறியல் போராட்டம் இடம் பெறவுள்ளதெனத் தெரிவித் துள்ளனர்.

(சோ,கு)

# கிளி.,முல்லை பட்டதாரிகளில் தெரிவானோர் விபரம் ஓரிரு வாரங்களில் கிடைக்கும்!

## கிளி.அரசாங்க அதிபர் தகவல்

(அலுவலக செய்தியாளர்)

கிளி.முல்லை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளில் அரசதுறைக்கு தெரிவானோர் பெயர் விபரங்கள் இன்னும் ஓரிரு வாரங்களில் அறி விக்கப்படவுள்ளதாக கிளி.அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கிளி.மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் அவர் களுடன் எமது செய்தியாளர் தொடர்பு கொண்டபொழுது தெரி விக்கையில். அரசதுறை வேலைவாய்ப்பு நியமனங்களில் கிளி. முல்லைமாவட்ட பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக புனர்வாழ்வு அமைச்சு செயலர்,

(12ஆம் பக்கம் பார்க்க)

## கைக் குண்டு வீச்சு

மட்டக்களப்பு வாழைச்சேனை யில் ‘கிரனைட்’ குண்டுத் தாக்கு தல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று நண்பகல் பதி னொன்று பதினைந்தளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு வர் வீட்டில் கிரனைட் குண் டொன்றை வீசினர்.

வாழைச்சேனை தபால் நிலையத்திற்கு அருகே இக் குண்டு வீழ்ந்து வெடித்துள்ள போதிலும் சேதம் எதுவும் ஏற்

(12ஆம் பக்கம் பார்க்க)

# சட்ட விரோத ஆயுதங்களை 10 ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்குக

## மட்டக்களப்பில் புலிகள் கோரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயுதங்கள் வைத்திருப்போர் எதிர் வரும் 10ஆம் திகதிக்கு முன்னராக அவற்றை தம்மிடம் ஒப்படைக்குமாறு விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அண்மைக் காலமாக இம்மாவட்டத்தில் சட்ட விரோதமாக ஆயுதங்கள் வைத்திருந்தோர் விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வேலையற்ற பட்டதாரிகள் போராட்டம் அம்பாறையில் நேற்று பூரண ஹர்த்தால்

கிழக்கின் அம்பாறை மாவட்டத்தில் நேற்றுப் பூரண ஹர்த்தால் அனுஷ் டிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் 30 ஆயிரம் பட்டதரிகளுக்கு நியமனம் வழங்கு வதாகக் கூறி தற்போது ஆட்சியில் இருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் ஆட்சி பீடம் ஏறிய பின்னர் அது தற்போது கைவிடப்பட்டுள்ளதாக வேலையற்ற பட்டதாரிகள் குற்றம்சாட்டியுள்ளனர். அத்துடன் பெரும்பான்மை சிங்களவர்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அந்த வகை யில் தற்போது வெளியிடப்பட்டிருக்கும் பட்டியலில் அம்பாறை மாவட்ட தமிழ் முஸ்லீம் பட்டதாரிகள் திட்ட

(12ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளைச் சீண்டும் நடவடிக்கையில் அதிரடிப்படையினர் ஈடுபடுகின்றனர்

## அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன்

அம்பாறை பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளைச் சீண்டும் நடவடிக்கைகளில் படையினர் தொடந்தும் ஈடுபட்டு வருவதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் த. குயிலின்பன் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமையன்று தமது போராளிகள் 10 பேர் படையினரால் கைது செய்யப்பட்டு, பின்னர் விளக்மறியலில் வைக்கப்பட்டனர். திங்கட்கிழமை அக்கரைப்பற்று மற்றும் மண்டூர்ப் பகுதிகளில் தமது போராளிகள் 6 பேர் அதிரடிப்படையினராலும், காவல்துறையினராலும், சோதனையிடப்பட்டுள்ளனர். போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னிலையில் மாத்திரமே படையினரின் கட்டுப்பாட்டு பகுதிகளில் அரசி யலில் ஈடுபட்டுள்ள தமது போராளிகளைச் சோதனையிட முடியும் இந்த நிலையில் காவல்துறையினர் தற்சமயம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### முக்கிய அறிவித்தல்

புதுக்குடியிருப்பு சந்தியில் குறிஞ்சி தையல் நிலையத்தில் இயங்கிவந்த மணிக்கூடுகள் திருத்தும் நிலையம் (கலைப்பிரியன்) தற்காலிகமாக இடமாற்றவுள்ளதால் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் உங்கள் மணிக்கூடுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன். நன்றி உரிமையாளர். (4675)


# பட்டதாரிகள் நியமனத்தில் நாம் திட்டமிட்டே புறக்கணிக்கப்பட்டோம்

## கிளி.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்

அரசதுறைகளில் பொருத்தமான வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை நியமிப்பதற்காக நடைபெற்ற நேர்முகத்தேர்வின் அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்ட பெயர் பட்டியலில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை சேர்ந்த எந்தவொரு பட்டதாரிக்கும் நியமனம் வழங்கப்படாமையை சிறிலங்கா அரசின் திட்டமிட்ட புறக்கணிப்பாகவே நாம் கருதுகின்றோம் என கிளி.வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் அரசின் இப் போக்கு வன்னிப் பகுதியில் உள்ள பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் மாணவர், பாடசாலை மாணவர்கள் போன்றோரின் எதிர்காலத்தினை கேள்விக்குறியாக்கியுள்ளது. எனவே அரசின் இத் திட்டமிட்ட புறக்கணிப்பைக் கண்டித்து இன்று கிளிநொச்சி அரச செயலகத்தில் மறியல் போராட்டம் நடைபெறும். சாதகமான பதில் கிடைக்கப் பெறாதுவிடின் தொடர்ந்து வெகுஜனப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவது தவிர்க்க முடியாதது. எனவே இன்று அரச செயலகம் முன் நடைபெறும் மறியல் போராட்டம் காரண மாக மக்களுக்குஏற்படும்அசௌ காரியங்களையிட்டு வேதனையடையும் அதேவேளை அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை வங்கியின் 65 ஆம் ஆண்டு நிறைவு

(அலுவலக செய்தியாளர்)

இலங்கை வங்கியின் 65 ஆம் ஆண்டு நிறைவுவிழா நேற்று கிளிநொச்சி இலங்கை வங்கிக் கிளையில் வங்கி முகாமையாளர் தலைமையில் கொண்டாடப்பட்டது. இலங்கை வங்கியின் வன்னிப் பிராந்திய முகாமையாளர் வே.ஐயம்பிள்ளை இவ் விழாவின் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். (சோ,கு)

## உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு அரிப்பில் பல்வேறு நிகழ்ச்சிகள்


மன்னார் அரிப்பில் உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு நேற்று வீதி திருத்தம் செய்தல், பிரதேச செயலகம் துப்பரவு செய்தல் போன்ற சிரமதானப்பணிகள் நடைபெற்றன. அத்துடன் பிரதேச செயலகக் கட்டடத்தில் கண்காட்சி ஒன்றும் இடம்பெற்றதுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந் நிகழ்விற்கு திட்டமிடல் பணிப்பாளர் கே.சண்முகநாதன் அவர்கள் தலைமை வகித்தார். (மி)

## பூவரசங்குளப் பிரதேச வேலைத்திட்டங்களை ஆசிய அபிவிருத்திவங்கி அதிகாரி பார்வையிட்டார்

(அலுவலக செய்தியாளர்)

முல்லை. மாவட்ட பூவரசங்குள பிரதேச திட்டங்களை ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பார்வையிட்டுள்ளார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் "நிக்கொட்"நிறுவனத்துடன் இணைந்து பூவரசங்குளத்தில் பல மக்கள் நலன் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதில் போர் அனர்த்தங்களால் பாதிக்கப் பெற்ற ஒரு முன்பள்ளி புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஒரு பொது மண்டபமும் ஒரு கிலோமீற்றர் நீளமான பாதை அமைப்புக்கான வேலைகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இத் திட்டங்கள் எல்லா வற்றிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியே நிதி உதவி செய்கின்றது. இவ் வேலைத்திட்டங்களை கடந்த 27 ஆம் திகதி வங்கியின் நிறைவேற்றுப்



பணிப்பாளர் பார்வையிட்டார். அதன் பின் நடைபெற்ற விழாவில் கலந்துகொண்டுதிட்டங்கள்பற்றித்தான் பூரண திருப்தி கொண்டுள்ளதாகக் கூறியுள்ளார். மிகவும் எழுச்சியுடன் நடைபெற்ற இந்த விழாவில் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதிகள் "நிக்கொட்" நிறுவனத்தின் பணியாளர்கள் மற்றும் பெருந்தொகையான பொது மக்கள், நலன் விரும்பிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (தீ)


## பணிநிலை வேண்டுகை

மனிதவள மேம்பாட்டுப்பகுதியால் ஆரம்பிக்கப்படவுள்ள கணக்கியல், கணக்காய்வுப் பயிற்சிக் கல்லூரிக்குப் பின்வரும் பணிநிலைகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**பணிநிலை:-**

1] கல்லூரி மேற்பார்வையாளர்

2] சிற்றூழியர்

**தகைமைகள்:-**

1) பணிநிலை 1-க.பொ.த உயர்தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2) பணிநிலை 2-குறைந்தது ஆண்டு எட்டு கல்வி கற்றவராயிருத்தல் வேண்டும்.
3) அகவை - 22வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு:-**

1) பணிநிலை 01ற்கு ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
2) பணிநிலை 02 இற்கு ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்
3) விண்ணப்ப முடிவுநாள் -10.08.2004.
4) விண்ணப்பதாரர்களுக்கான நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள்-12.08.2004காலை 9.00 மணி.
5) நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:-

மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
நிதித்துறை,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.

6) நேர்முகத்தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித்தகைமைச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ்களோடு வருக.
7) விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:-

பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
நிதித்துறை,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.

ஆளுகை
மனிதவள மேம்பாட்டுப்பகுதி (சி-9768)



## University of Jaffna Sri Lanka
## DisclPlinary Inquiry officers

Applications are invited by me by up to 09.08.2004 from public officers/ Retired Public Officers /retired Officers from University Services who have experiences in System of Administration and holding inquiries.

Those who are intened to apply are reguested to furnish their full name address and contact Telephone Number, designations(at the time of retirement) with experience to the Vice-chancellor, University of Jaffna on or before the above date

Vice-Chancellor,
02.08.2004.

(சி-10055)




## துளசி புகைப்படக் கலையகம்

வாடிக்கையாளர்களுக்கு ஓர் அன்பான அறிவித்தல். பாஸ்,பாஸ்போட், தேசிய அடையாள அட்டை மற்றும் 4R சைஸ் கலர் படங்களையும், அவசர தேவைகள் கருதி 30 நிமிடங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்பதனை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

துளசி புகைப்படக் கலையகம்,
கண்டி வீதி,
மத்திய கல்லூரி முன்பாக,
ஆனந்தபுரம், கிளிநொச்சி. (4872)


## 8ஆம் ஆண்டு நினைவில்




தாயின் மடியில் 29 .10 1976 — தாயக மீட்பில் 03 08 1996

### கப்டன் அன்பானந்தன்

சபாரத்தினம் - செல்வநீதன்
[வெற்றிலைக்கேணி - வடமராட்சி கிழக்கு]

சம்பவம்:-யாழ். நாச்சிமார் கோவிலடியில் ஏற்றபட்ட நேரடி மோதலில்

## 19ஆம் ஆண்டு நினைவில்



தாயின் மடியில் 12 05 1962 — தாயக மீட்பில் 16 04 1985

முன்னைநாள் படைத்துறைப் பயிற்றுவிப்பாளர்

### வீரவேங்கை அன்பு

மூத்ததம்பி - தனபாலசிங்கம்
[வெற்றிலைக்கேணி - வடமராட்சி கிழக்கு]

சம்பவம்:-மானிப்பாயில்ஏற்பட்ட வெடிவிபத்தில்

தானைத்தலைவன் தலைமையில் பணி புரிந்தீர்.
அன்பிற்கு முண்டோ அடைக்கும் தாழ்
அன்பான ஆனந்தா ஆண்டு எட்டு ஆனாலும்
ஆறாது எம் துயரம் மீளாது எம் நினைவை விட்டு
சாவரும் போதிலும் தணலிடை வேகிலும் சந்ததி தூங்காது
தாயகம் வரும்வரை தாவிடும் புலிகளின் தாகங்கள் தீராது.

வெற்றிலைக்கேணி. (சி-10053) குடும்பத்தினர்.

# பராகுவேயின் வர்த்தக வளாகத்தில் தீவிபத்து


# 283 பேர் உடல் கருகிப் பலி; 300 பேருக்கு காயம்

## வளாகத்தின் கதவுமூடியிருந்ததால் இழப்புக்கள் அதிகரிப்பு

**தென்அமெரிக்க நாடான பராகுவேயின் தலைநகர் அகன்சியா நகரிலுள்ள வணிக வளாகமொன்றில் நேற்று முன்தினம் பாரிய தீ விபத்தொன்று இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

இத்தீவிபத்தின் போது 283 பேர் உடல் கருகி உயிரிழந்ததுடன் 300 இற்கும் மேற்பட்டோர் தீக்காயங்களுடன் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் நெருக்கடி மிக்க அந்த வணிக வளாகத்தின் ஒரு பகுதியில் பிடித்த தீ வேகமாக அனைத்துப் பகுதிகளிற்கும் பரவியுள்ளது. இதன் காரணமாக அங்கிருந்த மக்கள் உயிர்தப்பும் நோக்குடன் முண்டியடித்துக் கொண்டு வேகமாக ஓடியுள்ளனர். இருந்த போதிலும் எளிதில் தீப் பிடிக்கக் கூடிய பொருட்கள் இருந்ததன் காரணமாக தீ வேகமாக பரவியது என்றும், இதனால் வணிகவளாகத்தின் ஒருமாடி இடிந்து விழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. தீவிபத்திற்கான காரணம் குறித்து உடனடியாக எதுவும் தெரியவில்லை எனவும் தீ பிடித்த போது வணிக வளாகத்தில் கதவுகள் மூடப்பட்டிருந்ததால் உள்ளே இருந்தவர்கள் வெளியே வரமுடியாமல் உடல் கருகி உயிரிழந்ததாக சம்பவத்தினை நேரில் பார்த்த சிலர் தெரிவித்துள்ளனர். இக் கோரவிபத்து நடந்த இடத்திற்கு விரைந்து சென்ற அந் நாட்டு அதிபர் "மிக் பனட்றியட்டோ" காயமடைந்தவர்களிற்கு ஆறுதல் கூறியுள்ளாா.



பராகுவேயின் தலைநகர் அசன்சின் இல் வர்த்தக வளாகத்தில் இடம்பெற்ற தீ விபத்தில் சிக்குண்டவர்களை தீயணைப்புப் படையினர் மீட்கின்றனர்.



ஈராக்கின் வடக்கு நகரான மொசோலில் இடம் பெற்ற கார்க்குண்டு வெடிப்பில் சேதமடைந்த வாகனங்கள்

## அமெ.படையினர் கூடியிருந்த தேவாலயங்கள் மீது ஈராக்கில் தீவிரவாதிகள் தாக்குதல் 15 பேர் பலி

(பாக்தாத்)

ஈராக்கில் அமெரிக்க கூட்டுப் படையினருக்கெதிராக தொடர் தாக்குதல் நடத்திவரும் சதாம் ஆதரவுத் தீவிரவா[illegible]கிகள் நேற்று முன்தினம் தலை[illegible]க்தாத்தி[illegible] தேவாலயங்க[illegible] கார்[illegible] குண்டுத் தாக்[illegible]தல்களை நடத்தியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஐந்து தேவாலயங்கள் மீது நடத்தப்பட்ட இத்தாக்குதல் காரணமாக 15 பேர் உயிரிழந்ததுடன் 10 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். ஞாயிற்றுக் கிழமை வழிபாட்டினை மேற்கொள்வதற்காக அமெரிக்க படையினர் உள்ளிட்ட ஏராளமான மக்கள் கூடியிருந்த சமயத்திலேயே தீவிரவாதிகள் இக்கார்வெடிகுண்டை வெடிக்கச் செய்துள்ளனர்.

இதுவரை ஆட் கடத்தல்; பாதுகாப்பு படையினர் மீது தாக்குதல் போன்றவற்றில் ஈடுபட்டு வந்த தீவிரவாதிகள் தற்போது வழிபாட்டுத்தலங்கள் மீதும் தாக்குதல் நடத்தத் தொடங்கியிருப்பது அமெரிக்க கூட்டுப் படையினரை அச்சமடையச்செய்துள்ளது. தாக்குதலின் போது காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## வடபோர்த்துக்கல்லில் வெடி விபத்து எட்டுப் பேருக்கு எரிகாயம்

வட போர்த்துக்கல்லில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றின் ஒரு பகுதியில் ஏற்பட்ட வெடி விபத்தில் 08 பேர் எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். எண்ணெய்த் தாங்கி தரிப்பு நிலையத்திற்கும், பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையத்திற்கும் இடையிலான குழாய் அமைப்புகளில் இவ் வெடிவிபத்து இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மூன்று கோடி யூரோ நாணய செலவில்குழாய் அமைப்பு வளையமைப்பு திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றவேளை இவ்வெடிவிபத்து ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நியூயோர்க்கில் உலகவங்கிக் கட்டடம் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தலாம்

### -பாதுகாப்பை அதிகரிக்கிறது அமெரிக்கா-

(வோஷிங்டன்)

வோஷிங்டனில் உள்ள உலக வங்கி, சர்வதேச நிறுவனம் நியூயோர்க்கிலுள்ள பங்குச்சந்தை நிறுவனம் ஆகியவற்றின் மீது அல்-ஹைதா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியானதைத் தொடர்ந்து இந்நகரங்களில் அமெரிக்கா அரசு பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் நவம்பர் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இக்கட்டடங்கள் தாக்கப்படலாமென தகவல்கள் கிடைத்திருப்பதாக உளவுத்துறையினர் தெரிவித்ததைத் தொடர்ந்து உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சு உயர்நிலை அதிகாரிகளால் நேற்று முன்தினம் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது உலக வங்கிச் சர்வதேச நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு மிக அருகில் தான் வெள்ளைமாளிகை உள்ளது. ஆயினும் இப்பகுதியை மூடுவதற்கான திட்டம் எதுவும் எமக்கில்லையென அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

### –தமிழகம் உட்பட எட்டு மாநிலங்களில்

## அரச மருத்துவக் கல்லூரி அனுமதியில் உச்ச நீதிமன்றம் அதிருப்தி

தமிழகம், மாகாராஷ்டிரம் கர்நாடகம் உள்ளிட்ட எட்டு மாநிலங்கள் அரச மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவக் கல்வியில் மாணவர்களைக் கால அட்டவணைப்படி சேர்த்துக்கொள்ளவில்லை என்று உச்ச நீதிமன்றம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இதற்கான சரியான காரணத்தை எட்டு மாநிலங்களும் தெரிவிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஜுலை 21-31 இற்குள் மாணவர்கள் மருத்துவக் கல்விக்குச் சேர்க்கப்பட வேண்டும் ஆனால இதுவரை மாணவர்கள் சேர்க்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



மேற்குப் பாக்தாத்தில் அல் அமெறியா-அபுகிறாய் சிறைச் சாலையில் இருந்து விடுதலை செய்யப்பட்ட கைதி அவரின் சகோதரனைத் தழுவுகின்றார்.

## மூன்றாவது தடவையும் பிளேயர் அதிகாரத்தைக் கைப்பற்றுவார்

### கருத்துக் கணிப்புக்கள் தெரிவிப்பு

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் ஈராக் யுத்தம் தொடர்பாக எதிர்நோக்கிய எதிர்ப்புக்களிலிருந்து மூன்றாவது தடவையும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவாரென அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்று தெரிவித்துள்ளது. பிரதமரின் ஆளும் தொழிற்கட்சி பிரதான எதிர்க்கட்சியினை விட 32.2 சதவீதம் கூடுதலான வாக்குகளைப் பெறுமென இவ்வாக்கெடுப்பிலிருந்து தெரியவருகிறது. 2005ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பிரிட்டிஷ் பொதுத்தேர்தலில் பிளேயர் வெற்றி பெறுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

## சரியான உலக முறைமைக்கமைவாக ஐ.நா.சபை திருத்தியமைக்கப்பட வேண்டும்

### ~இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்


(புதுடில்லி)

சரியான உலக முறைமை ஒன்றிற்கு ஐ.நா.சபையும், ஐ.நா .பாதுகாப்பு சபையும் திருத்தியமைக்கப்பட வேண்டியது அவசியம் என்று பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

உலக அரசியல் சூழல் பாதுகாப்பின்மையை உருவாக்கி நமது சவால்களை மேலும் சிக்கலாக்கி இருப்பதுடன், நமது பிரச்சினைகளை மேலும் அவசரமாக்கியுள்ளது என்றும் உலக மயமாக்கலுக்குப பிராந்திய ஒத்துழைப்பு எதிரானது அல்ல என்றும் கூறிய அவர்,

பொருளாதார ஒத்துழைப்பிற்கான ஏழு நாடுகளுடன் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதற்கு வானொலி மற்றும் ஏனைய வசதிகளுடன் புதுடில்லியில் இசற்மையத்தை இந்தியா அமைக்கும் என்றும் கூறியுள்ளர்.

அத்துடன் விவசாயம், சுற்றுப்புறப் பாதுகாப்பு, இயற்கை சீற்றம்,பேரிடர் பாதுகாப்பு, நிர்வாகம் ஆகிய தகவல்களை முன் கூட்டியே அறிந்து கொள்வதற்கு வின்செட் அமைப்பு ஒன்று புதுடில்லியில் திறக்கப்படும் என்று பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார். பங்களாதேஷ், இந்தியா, மியான்மார், இலங்கை, தாய்லாந்து, நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளைக் கொண்ட வின்செட் அமைப்பின் உச்சி மாநாட்டில் கடந்த சனிக்கிழமை பிரதமர் உரையாற்றும் போதே இதனைக் கூறியுள்ளார். இந்த நாடுகளுக்கிடையே உள்ள பருவ நிலை, இயற்கைச் சீற்றம் என்பவற்றில் அவ்வப்போது ஏற்படும் நிலைகளை இந்த அமைப்பு சேகரித்து வழங்கும் என்று கூறியுள்ளார். பயங்கரவாதத்தையும், சமய தீவிரவாதத்தையும்,ஆயுதம், போதைப் பொருட் கடத்தலையும் எதிர்த்துப் போரிட்டு அமைதியையும் பாதுகாப்பையும் நிலை நிறுத்துமாறு வின்செட் நாடுகளைப் பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார். இந்த நடவடிக்கைகள் மூலமாக இந்த நாடுகளுக்கிடையே பரஸ்பர நம்பிக்கை மேம்படும் என்றும் பிரதமர் மேலும் கூறியுள்ளார்.



தாய்லாந்திலிருந்து நாடு திரும்பிய இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை விமானநிலையத்தில் இந்தியக் கடற்படையின புதிய தளபதி அர்ஜீன் பிரகாஷ வரவேற்கிறார்.

## ஒருங்கிணைந்த மாதிரி விவசாயப் பண்ணையில்

# நீர் முகாமைத்துவக் கருத்தமர்வில்

# தானியங்கி சால்பாசன முறை அறிமுகம்

**வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரி விவசாயப்பண்ணையில் த.பொ.மே. நிறுவனத்தின் ஏற்பாட்டில் நீர்முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி வகுப்பொன்று அண்மையில் நடைபெற்றது. இதில் புதிய நீர்ப்பாசன முறையொன்று அறிமுகம் செய்துவைக்கப்பட்டது.**

மேற்படி நீர்முகாமைத்துவம் தொடர்பான விரிவுரைகளை கனடா மிலிற்ரோவா பல்கலைக்கழக விரிவுரையாளர் பேராசிரியர் இரா சிறிறங்கன் நிகழ்த்தினார். இப் பயிற்சி வகுப்பில் த.பொ.மே. நிறுவன போராளிகள், பணியாளர் கள்,விவசாயத்திணைக்கள உத்தி யோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். பயிற்சி வகுப்பின் இறுதியில் தானியங்கி சால்பாசன நீர்இறைக்கும் முறை மாதிரி ஒன்றும் அறிமுகப்படுத் தப்பட்டு பேராசிரியரால் நீர் இறைக்கும் செயற்பாடுகள் பற்றி விரிவாகவிளக்கமளிக்கப்பட்டு நீர் இறைத்தும் காண்பிக்கப்பட்டுள் ளது, மேற்படி தானியங்கி சால் பாசன முறையினை ஒருங்கி ணைந்த மாதிரிப்பண்ணையில் விவசாயிகள், ஆர்வலர்கள் பார்வை யிட்டு பயனடையலாம் என த.பொ.மே. நிறுவன செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இலங்கை மின்சாரசபை உயர்அதிகாரிகள் மற்றும் ஜெய்கா நிறுவன பிரதிநிதிகள் நேற்று கிளிநொச்சி மின்சாரசபை காரியாலயத்திற்கு வந்து நிலைமைகளைப் பார்வையிட்டுச் சென்றமையினைப் படத்தில் காணலாம். (படம்:- சோதி,வரன்)

# மக்கள் பிரச்சினைகளை இனங்கண்டு வேலைத்திட்டங்களை விரைவுபடுத்த முடிவு

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்களை விரைவு படுத்தும் நோக்கில் மக்கள் எண்ணங்களை அறிந்து அதற்கேற்றாற்போல் வேலைத்திட்டங்களைக் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. இதற்கமைய வவுனியா சேமமடுக் கிராமத்தின் வவுனியா தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் சி.திருஞானசம் பந்தமூர்த்தி தலைமையில் அண்மை நாட்களில் சேமமடு கிராமத்தில் மக்களை அவர்களது இல்லங்களிலே சந்தித்து பிரச்சி னைகள் இனங் காணப்பட்டது.

வவுனியா அபிவிருத்திப்புனர் வாழ்வு நிறுவன இணைப்பாளர், நெடுங்கேணி அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவன இணைப் பாளர்கள், பணியாளர்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழக பணியாளர்கள் கொண்ட குழு இவ் நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கு கொண்டு மக்கள் பிரச்சினைகளை இனங்கண்டு திட்டத்தினை விரைவு படுத்தும் படி பணிப்பாளரினால் ஆலோசனை வழங்கப்பட்டது. (தீ)

# பொதுக்கிணறு, மலசலகூடம் அமைக்க கெயார் நிதியுதவியுடன் ஏற்பாடு

(முள்ளிவளை)

கெயார் நிறுவனத்தின் நிதியுதவியுடன் முள்ளியவளைப் பிரதேச பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தினால் முள்ளியவளை கிழக்கு கிராம முதல்வர் பிரிவில் உள்ள 25 குடும்பங்களுக்கு மலசல கூடம் அமைத்துக்கொடுக்கும் திட்டத்தில் பயனாளிகள் தெரிவு இடம்பெற்று வருகின்றது.

மேற்படிப்பகுதி மக்களின் சுகாதார சேவைகளையும், அவசர உடனடித் தேவைகளையும் இனங்கண்டு மலசல கூடங்களும் அப்பகுதி மக்களின் குடிநீர் தேவையைக் கருத்தில் கொண்டு மூன்று பொதுக் கிணறுகளும் அமைக்கப்படவுள்ளதாக முள்ளியவளைப் பிரதேச பெண் கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் செல்வி. சோ.கலாமலர் தெரிவித்துள்ளார். (ஆ)

# மல்லாவி பொதுச்சந்தைக்குச் செல்லும் முக்கிய வீதி பழுதடைந்த நிலையில்

(மல்லாவி)

மல்லாவி பொதுச்சந்தைக்குச் செல்லும் பிரதான வீதி குன்றும் குழியு மாக காணப்படுவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வரு கின்றனர். இவ் வீதியானது பல வருடங்களாக புனரமைப்பு செய்யா துள்ளமை குறிப்பிடத்தக்கது. சந்தைக்கு துவிச்சக்கர வண்டிகளிலும், உந்துருளிகளிலும் மரக்கறிகளை கொண்டு செல்லுகின்ற வியாபாரிகள் பலர் கீழே விழுந்து காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இதனால் சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் எடுத்து இவ்வீதியை புனரமைக்குமாறு அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (24)

# நோயாளர் நிலவர அறிக்கை

(கிளிநொச்சி)

அக்கராயன் அரசினர் வைத்திய சாலையின் சென்ற மாத நோயா ளர் நிலவர அறிக்கை வெளியிடப் பட்டுள்ளது. சென்ற யூன்மாதம் வெளிநோயாளர் பிரிவில் 3378 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

சாதாரண காய்ச்சல் காரணமாக 507 பேரும், மலேரியா காய்ச்சல் காரணமாக 112 பேரும், விசர் நாய் தடுப்பிற்கான சிகிச்சையினை 03பேரும், டயரியாவிற்கு 51 பேரும், தொற்றுநோய்களிற்கான சிகிச்சை யினை 113 பேரும் காயங்களிற்கு 421 பேரும் சிகிச்சை பெற்றுள் ளனர்.

இங்கு மாதத்தின் 1ஆவது ஞாயி றும் 3ஆவது ஞாயிறும் கிளினிக் சிகிச்சையினை பெறமுடியும் என்று வைத்தியசாலையின் பொறுப்பு வைத் தியஅதிகாரி தெரிவித்துள்ளார்.(15)

## விலைக்கட்டுப்பாட்டுக்குழு அரசால் அமைப்பு

அரிசி, சீனி, மா,பால்மா எல்பிஜி காஸ் போன்ற அத்தியாவசிய பொருட்களின் விலைகளைக் குறைப் பதற்கு அரசாங்கம் விலைக் கட்டுப் பாட்டுக்குழு ஒன்றை அமைத்துள் ளது என வணிகத்துறை அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்

மேலும் சீனியை குறைந்த விலையில் பிரேசில் நாட்டிலிருந்து இறக்குமதி செய்வதற்கு அரசு தீர்மானம் எடுத்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வீதி ஓரங்களைத் துப்புரவாக வைத்திருக்க பொதுமக்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி நகரப் பகுதியை அண்டிய கிராமங்களிலுள்ள வீதி ஓரங்களின் பற்றைக்காடுகள் சிரம தானம் மூலமும், உலக உணவுத் திட்டத்தின் மூலமும் சிரமதானப் பணிகளை மேற்கொண்டும் அழிக்கப்பட்டு வருகின்றன.

இருந்தபொழுதிலும் பல கிரா மங்களில் உள்ள வீதி ஓரங்களி லுள்ள பற்றைக்காடுகள் தற் போதும் அழிக்கப்படாதுள்ளமை யின் காரணமாக அப்பகுதி வீதி களூடாகப் பயணிப்பவர்கள் பெரும சிரமங்களை எதிர்நோக்கிவரு கின்றனர்.



பற்றைகளால் சூழப்பட்ட வீதி

குறிப்பாக குடியிருப்பாளர்கள் ஒவ்வொருவரும் தங்கள் குடியி ருப்புக்காணிகளுக்கு முன்னால் உள்ள பற்றைக்காடுகளை அழிக்க முன்வரும் பட்சத்தில் குடியிருப் பினை அண்டிய வீதிகள் யாவும் சூழல்பாதுகாப்பு மற்றும் போக்கு வரத்து என்பனவற்றிற்கு ஏற்ற வகையில் அமைவதற்கான வாய்ப் பேற்படுவதற்கு வழிசமைக்கும்.

எனவே இவ்விடயத்தில் ஒவ் வொரு குடியிருப்பாளர்களும் முன்வந்து தங்கள் பகுதிகளை துப்புரவாக வைத்திருப்பதற்கு முக்கிய பங்காற்றுவதற்கு முன்வர வேண்டும்.

இவ்விடயத்தில் அந்தந்தப் பிர தேச கிராம அபிவிருத்திச்சங் கங்கள், கிராமசேவை அலுவலர் கள் மற்றும் பிரதேச சபையினர் முக்கிய கவனமெடுத்து செயற் படும் பட்சத்தில் சூழல் பாதுகாப் பினை நடைமுறைப்படுத்துவதாக வும் வீதி ஓரங்கள் யாவும் துப்புர வாக அமையும் என்பதும் திண்ணம்.

எனவே இவ்விடயத்தில் சகல தரப்பினரும் முன்வந்து செயற்படு மிடத்து கிராமப்பகுதி வீதிகளில் பாதுகாப்பாக போக்குவரத்தையும் மேற்கொள்வதோடு சுற்றுச்சூழ லையும் துப்புரவாக வைத்துக் கொள்ள முடியுமென்பது குறிப் பிடத்தக்கது. (சோ,கு)

# மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியில் வெற்றி பெற்றோர் கௌரவிப்பு

(வட்டக்கச்சி)

தமிழீழ விளையாட்டுத் துறை மற்றும் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் அனுசரணையுடனும் வட்டக்கச்சி இராமநாதபுர விவசாயப் பெருமக் களால் நேற்று முன்தினம் வட்டக் கச்சி கலைவாணி சவாரித்திடலில் மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நடைபெற்றது.

வன்னி பெரு நிலப்பரப்பிலிருந் தும் யாழ். மண்ணில் இருந்தும் பல காளைச்சோடிகள் இதில் பங்கு பற்றின. அ,ஆ,இ,ஈ என நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இப் போட்டிகள் இடம்பெற்றன.

மாலை 2.30 மணிக்கு ஆரம் பமாகிய இந் நிகழ்வின் போது மங்கல விளக்கினை பளை பிரதேச விளையாட்டு அலுவலரும், வட்டக் கச்சி அரசியல் துறையைச் சேர்ந்த இராமஜெயமும் ஏற்ற தேசியக் கொடியினை வட்டக்கச்சி அரசியல் துறை வலயப்பொறுப்பாளர் இளையவன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து அகவணக்கத்துடன் விளையாட்டுக்கள் ஆரம்பமாகி யது.

அ.பிரிவு 1ஆம் இடம். தேவன் புளியம் பொக்கணை, 2ஆம் இடம் செ.குமரன் பலாலி யாழ்ப்பாணம், 3ஆம் இடம் மு. செந்தில்குமார் பிரமந்தணாறு,

ஆ.பிரிவு 1ஆம் இடம் சி. பாலன் வட்டக்கச்சி, 2ஆம் இடம் இ.சிவராசா பெரியகுளம், 3ஆம் இடம் க.சிறிதரன்,பூநகரி

இ.பிரிவு 1ஆம் இடம் த.ரமேஸ் காந்தன் வட்டக்கச்சி, 2ஆம் இடம் க.றோமியா விசுவ மடு, 3ஆம் இடம் மு. நாதன் விசுவ மடு

ஈ. பிரிவு 1ஆம் இடம் பு.பத்ம நாதன் வட்டக்கச்சி, 2ஆம் இடம் த.ரமேஸ்காந்தன் வட்டக்கச்சி, 3ஆம இடம் வே. பிரபாகரன் முரசுமோட்டை ஆகியோருக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டன. (12)

# சிரமதானம்

முள்ளியவளை கமநலசேவை நிலைய வளாகம் சிரமதானப்பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர் சு.இராசலட்சுமி தலைமையில் கமநல சேவைநிலை யக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட சகல கமக்கார அமைப்புக்களின் உறுப் பினர்கள், விவசாயத் திணைக்களப் பிரதிநிதிகள், முள்ளியவளை த.பொ.மே.நிறுவன பொறுப்பாளர், முள்ளியவளைப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் என சுமார் 120இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிரமதானப்பணிமூலம் வளாகம் முழுவதும் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. (ஆ)

# பயனாளிகள் தெரிவு

(மல்லாவி)

மாந்தை கிழக்கு உதவி அர சாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட விநாயகபுரம் கிராமத்தில் கெயார் எக்கோ திட்டத்தின் கீழ் இடம் பெயர்ந்து மீளவும் குடியமர்ந்த மக்களில் பயனாளிகள் தெரிவுக் கூட்டம் விநாயகபுரம் கிராம சேவ கர் அலுவலகத்தில் கடந்த வியாழக் கிழமை காலை10.00மணியவில் துணுக்காய் பாண்டியன்குளம் அபிவிருத்திக்குழு இணைப்பாளர் க.ஜீவகாரணியம் தலைமையில் இடம்பெற்றது. இதில் கால்நடை வளர்ப்பு, சிறுதானிய வழங்கல் ஆடுவளர்ப்பு, விவசாயம் போன்ற கருத்துக்களும் குடிநீர்ப் பிரச்சினை, சுகாதாரம் போன்றவை என்பன குறித்த கருத்துக்களை பாண்டியன் குளம் துணுக்காய், புனர்வாழ்வுக் கழக வலயப் பணிப்பாளர் மூமூர்த்தி, கெயார் நிறுவனப் பிரதிநிதிகள், அரசியல் துறைப் பிரதிநிதிகள், பாண்டியன்குளம் தமிழீழ பொருண் மிய இணைப்பாளர் கி.அமலன், கிராம சேவையாளர் பொன்னுத் துரை ஆகியோர் கருத்துரை வழங் கினர். இதில் 112 பயனாளிகள் தெரிவு இடம்பெற்றது. (24)

## புதிய நிர்வாக தெரிவு

துணுக்காய் பிரதேசத்தின் கல்வி ளான் கிராம சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுத் தெரிவு நிகழ்வு கல்விளான் பாடசாலை மண்டபமுன்றலில் அண்மையில் பாண்டியன் குளம் துணுக்காய் புனர்வாழ்வுக் கழக அலுவலகம் த. தமிழ்ச்செல்வன் தலைமையில் இடம்பெற்றது.

கருத்துரைகளை கிராம பொறுப்பாளர் தி.ஈழக்கண்ணன் வழங்கினார். தலைவராக குமார சாமி கேதீஸ்வரன் உபதலைவராக ஆறுமுகம் நவரட்ணம், செயலாள ராக மரியதாஸ் குணரட்ணம், உப செயலாளராக சிவலிங்கம் சக்தியா, பொருளாளராக பொன் னம்பலம் ஞானச்சந்திரன் ஆகியோ ருடன் 06 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள். (24)

# யாழ்.மாவட்டத்தில் சிறுவர் உரிமையைப் பேண ஐ.நா.சபை;த.பு.கழகம் கூட்டாக முயற்சி

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டச் சிறார்களின் உரிமைகளைப் பேணுவதற்குரிய நடவடிக்கைகளைத் தமிழர் புனர்வாழ்வு கழகமும், ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான தூதுவராலயமும் இணைந்து மேற்கொண்டுள்ளன.**

சிறுவர் உரிமைகள் தொடர்பான அறிவின்மை காரணமாக யாழ்.மாவட்டத்தில் அடிக்கடி சிறுவர் உரிமை மீறல்களும், துஸ்பிரயோகங்களும் இடம்பெற்று வருகின்றன. இதனைக் கவனத்திற் கொண்டே இவ்விரு அமைப்பினரும் சிறுவர் உரிமைகளைப் பேணும் நடவடிக்கைகளை யாழ்.மாவட்டத்தின் பல பாகங்களிலும் மேற்கொண்டு வருகின்றனர். அந்தவகையில் இவ்விரு நிறுவனத்தினராலும் பின்தங்கிய பிரதேசங்களில் சிறுவர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர். (33)

# ஆண்டு 5 மாணவரிற்கு யாழ்.இல் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

ஆண்டு 5இற்கான புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் சிறார்களின் நன்மைகருதி பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கினை யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

எதிர்வரும் 7ஆம் திகதி யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ள இப்புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கில் யாழ்.மாவட்டத்தின் முன்னணி ஆசிரியர்கள் வழிகாட்டல் வகுப்புக்களை நடத்தவுள்ளனர்.

கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள், இடப்பெயர்வுகள் என்பவற்றால் ஏற்பட்ட வறுமை காரணமாக பாதிக்கப்பட்ட மாணவர்களின் நலனைக் கவனத்திற் கொண்டே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றிய ஊடக இணைப்பாளர் தெரிவித்தார். (33)

# இரு குழுக்களிடையே தென்மராட்சியில் மோதல் அரசியல் துறையினர் தலையிட்டு சமரசம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் உள்ள மந்துவில் பிரதேசத்தில் இரு குழுக்களுக்கிடையே இடம் பெற்று வந்த குழு மோதல்கள் யாழ். மாவட்ட அரசியல் துறையினரது தலையீட்டால் சமரசம்செய்து வைக்கப்பட்டுள்ளது.

இரு குழுக்களுக்கிடையே நிலவி வந்த கருத்து முரண்பாடு காரணமாக மேற்படி பிரதேசத்தில் அடிக்கடி குழு மோதல்கள் இடம்பெற்று வந்தன. இதனால் மக்கள் மத்தியில் பெரும்பரபரப்பும் பீதியும் ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்து நேற்று முன்தினம் மேற்படி குழு மோதல்களில் ஈடுபட்ட இருதரப்பினரையும் கூட்டிய யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளமபரிதி கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் உள்ளிட்டோர் மந்துவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் சமகால நிலைமைகள் தொடர்பான விளக்கங்களை வழங்கியதுடன் இரு தரப்பினரும் கருத்து முரண்பாடுகளை கைவிட்டு காலத்தின் தேவையை உணர்ந்து ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டும் என்பதையும் வலியுறுத்தினர்.

இதனை ஏற்று இருதரப்பினரும் தமது முரண்பாடுகளைக் கைவிட்டு விடுவதாக உறுதியளித்ததுடன் அதற்கு உத்தரவாதமும் வழங்கினர் இதனால் அப் பகுதியில் அமைதிநிலை உருவாகியுள்ளது. (33)

# நியமனம் வழங்கப்படாததால் உ.தே.க. டிப்ளோமாதாரிகள் முறையீடு

(யாழ்ப்பாணம்)

பட்டதாரிகளுக்கான தகைமைகள் இருந்த போதும் அரச துறை வேலை வாய்ப்பு நியமனங்களினை வழங்குவதற்கான நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படாத உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமாதாரிகள் (HNDA) தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கத்தைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை யாழ்.உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் இடம் பெற்ற இந்தச் சந்திப்பில் பல நடைமுறை விடயங்கள்குறித்து ஆராயப்பட்டன.

இதன்முடிவில் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் யாழ்.மாவட்ட உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமாதாரிகள் திட்டமிட்ட முறையில் புறக்கணிப்பு செய்யப்பட்டமை குறித்து ஆட்சேபம் வெளியிட்டதுடன் இதுகுறித்து உரிய தரப்பினருடன் பேசப்போவதாகவும் மாணவர்களுக்கு உறுதியளித்தார். (33)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சர்வோதய அமைப்பினரால் நடத்தப்படும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஆற்றல் மேம்பாட்டுக் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 11ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள சர்வோதய நிறுவனத்தினது மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் சம்பந்தப்பட்ட அனைவரையும் பங்குபற்றி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (33)

# சஞ்சீவனின் நினைவாக மாணவர் இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவன் சோ.சஞ்சீவனின் ஞாபகார்த்தமாக இரத்ததானம் வழங்கும் நிகழ்வு ஒன்று நேற்று முன்தினம் யாழ்.இந்துக்கல்லூரியில் இடம்பெற்றுள்ளது.

யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இவ் இரத்ததானம் வழங்கும் நிகழ்வில் 40 மாணவர்கள் இரத்ததானம் செய்துள்ளனர்.

யாழ்.போதனா வைத்திய சாலையின் இரத்தவங்கியில் நிலவும் இரத்தத்திற்கான தட்டுப்பாட்டு நிலையைக் கவனத்திற் கொண்டே சஞ்சீவன் ஞாபகார்த்தமாக இவ்இரத்ததானம் செய்யப்பட்டிருப்பதாக தமிழ் மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்தனர். (33)

# மக்களின் அடிப்படை உரிமையை யாழ். படையினர் மீறுகின்றனர்

## –அரசாங்க அதிபர் பத்மநாதன்

(கொழும்பு)

பொது மக்களுக்குச் சொந்தமான ஆயிரம் ஹெக்டேயருக்கும் அதிகமான நிலத்தைச் சிறிலங்கா இராணுவம் யாழ்ப்பாணத்திலும், வடக்கு கிழக்கின் ஏனைய பிரதேசங்களிலும் கைப்பற்றி வைத்திருப்பது அம் மக்களின் அடிப்படை உரிமையை மீறும் செயலாகும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ. பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

"சண்டேலீடர்" ஆங்கில வார இதழுக்கு பேட்டியளித்த அவர் மேலும் தெரிவிக்கையில்; பாரிய நிலப்பரப்பை ஆக்கிரமித்து வைத்திருப்பதன் மூலம் இராணுவம் பொது மக்களிடமிருந்து வெறுப்புக்கலந்த எதிர்ப்பைச் சந்தித்து வருகின்றது.

யாழ். மாவட்டத்தின் தெல்லிப்பளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 25 கிராம சேவகர் பிரிவுகளும் முழுமையாக இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இது நிலச் சொந்தக்காரர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும்.

இங்கு நிலைமை மிகவும் கஷ்ரமாக உள்ளது போர் நிறுத்த ஒப்பந்தமும் மக்களுக்கு எந்த வித பயன்களையும் வழங்கவில்லை என்றும் பத்மநாதன் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அளித்த பேட்டியில் பொது மக்கள் அமைதியாக வாழ்வதற்கு உயர் பாதுகாப்பு வலயங்களை அரசாங்கம் அகற்ற வேண்டும்.

சனாதிபதி மாளிகை, பொருளாதார இலக்குகள் கொண்ட வர்த்தக கட்டடங்கள் என்பனவற்றில் உயர் பாதுகாப்பு வலயங்களை ஏற்படுத்தப்பட வேண்டும். ஆனால் இங்கோ இராணுவ ஆக்கிரமிப்பால் கிராமங்களில் பாடசாலைச் சிறுவர்கள் பாதிக்கப்படுவதாகவே உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை பத்திரிகை ஒன்றுக்கு சிறிலங்காவின் இராணுவப் பேச்சாளர் சுமெத பெரேரா கருத்துத் தெரிவிக்கையில்,

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே இப் பிரதேசங்களை இராணுவம் கைப்பற்றியுள்ளது. அவற்றில் பலவற்றில் இராணுவ முகாம்கள் அமைந்திருப்பதால் அவை உயர் பாதுகாப்பு வலயத்தின் கீழ் வருகின்றன. இருப்பினும் இராணுவம் சிறிதளவு நிலப்பரப்பை கடந்த சில மாதங்களில் பொது மக்களுக்கு விடுத்துள்ளது என்றும் கூறியுள்ளார்.

## -அவசர வேலைத்திட்டத்தின் கீழ்-

# தென்மராட்சியில் வீதிகளை புனரமைக்க நடவடிக்கை

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதிகளில் அவசர வேலைத்திட்டத்தின் கீழ் வீதிகளைப் புனரமைக்க சாவகச்சேரி பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்திட்டத்தின் படி இந்த வீதிகளை புனரமைக்க ரூபாய் 86 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. இந்த திட்டத்தின் கீழ் கரம்பக்குறிச்சி வீதி, வரணிவீதி, நாவற்காடுவீதி, மன்னங்குறிச்சி கந்தசுவாமி கோயில்வீதி, வாகையடி வீதி, ஊத்தம்மயானவீதி, விடத்தற்பளைவீதி, மீசாலைதிருச்சிற்றம்பலம் வீதி, சந்திரன் கேணியடி வீதி, வீரபத்திரன் கோயில் வீதி, வளர்மதி விளையாட்டு மைதான வீதி போன்ற வீதிகளே துரித கதியில் புனரமைக்கப்பட உள்ளதாகத் தெரியவருகிறது.

# மாணவர்களின் கருத்துச் சுதந்திரத்திற்கு யாழ்ப்பாணத்தில் படையினர் அச்சுறுத்தல்

## -தமிழ் மாணவர் ஒன்றியம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ எழுச்சி நிகழ்வுகளில் கலந்து கொள்வதைத் தடுக்க முயற்சித்து வரும் சிறிலங்காப் படையினரது முயற்சிகளுக்கு எதிரான நடவடிக்கையாக கையெழுத்து வேட்டையில் குதித்துள்ள யாழ். மாவட்ட மாணவர்களினை அச்சுறுத்தும் செயற்பாடுகளில் படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டுள்ள சிறிலங்காப் படையினர் தமிழீழ எழுச்சி நிகழ்வுகளில் மாணவர்களைக் கலந்து கொள்ளவிடாது தடுக்கும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாணவர்கள் மேற்கொண்டு வரும் கையெழுத்து சேகரிப்புப் போராட்டத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வரும் ஏற்பாட்டுக் குழுவினை அச்சுறுத்திப் போராட்ட முயற்சிகளைத் தடை செய்யும் நோக்குடன் படையினர் இம் முயற்சிகளில் ஈடுபட்டு வரும் மாணவர்கள் தொடர்பான விபரங்களைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்காக பல தரப்பினர் மீது படையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். மாணவர்களது கருத்துச் சுகந்திரம், அபிலாசைகளை வெளிப்படுத்தும் சுதந்திரம் என்பவற்றை மீறி படையினர் மேற்கொள்ளும் இத்தகைய அச்சுறுத்தல் முயற்சிகளுக்கு யாழ். மாவட்ட தமிழ்மாணவர் ஒன்றியம் தனது கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளது. (33)

## நலன்புரி நிலைய மாணவரின் கல்வி மேம்பாட்டிற்கு நடவடிக்கை

யாழ்.மாவட்டத்தில் உள்ள இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்துவரும் வறிய மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்த தழிழீழமாணவர் அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனடிப்படையில் இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வரும் மாணவர்களின் இரவு நேர கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக தமிழீழ மாணவர் அமைப்பினர் நலன்புரி நிலையங்களில் வாழும் மாணவர்களுக்கு பெற்றோல் மாக்ஸ்களை வழங்கி வருகின்றனர். இதன் மூலம் வறிய மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மேம்பாட்டையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (33)

## -சர்.தமிழீழ மாணவர் பேரவையின்-

# சமகால அரசியல் கருத்தரங்கு 17ஆவது தொடர் கரவெட்டியில் இன்று


(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் சமகால அரசியல் கருத்தரங்கின் 17ஆவது தொடர் இன்று மாலை கரவெட்டிப் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இன்று மாலை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இணைப்பாளர் குகன் தலைமையில் இடம்பெறவுள்ள இக்கருத்தரங்கில் " சமாதான முயற்சிகளுக்கான தடைகளும், உலக நாடுகளின் பொருளாதாரக் கொள்கைகளும்'' என்ற தலைப்பிலான கருத்துரையினை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கே.ரி கணேசலிங்கம் வழங்குவார். (33)

# செலவு குறைந்த கட்டட நிர்மாண தொழில் நுட்பம்

## சிந்தனையும் பகிர்வும்



யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட எமது பகுதிகளில் ஓரளவுக்கேனும் மீளக் குடியமரும் மக்களினால் தமது வீடுகளை நிரந்தரமாக புனரமைத்துக் கொள்ளும் நடைமுறை தற்போது ஆரம்பித்துள்ளது. வீடுகளை புனரமைப்பதில் அல்லது புதிதாக நிர்மாணிப்பதில் காணப்படும் மிகப்பெரிய சவால் நிர்மாண செலவீனமாகும். இச் செலவீன அளவினால் பல வறியவர்களிடம் வீடுகள் பற்றிய எண்ணமே காணப்படுவதில்லை. இந் நிலையில் செலவு குறைந்த வீடுகளை நிர்மாணிக்கும் தெரிவைத் தவிர வேறு தெரிவுகள் தீர்வாக இருக்க மாட்டாது.

வீடுகள் என்பது பாதுகாப்பையும் மன மகிழ்வையும் தரும் மனித வாழ் விடங்களாகும். இவ் வாழ்விடங்களின் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் அவசியமானதாகும். உளவியலாளர்களின் கருத்துப்படி வீடுகளே மனிதனுக்கு அதிக மன அமைதியையும், திருப்தியையும் வாழ்வு மீதான நம்பிக்கையையும் வழங்குகிறது என வெளிப்படுத்தியுள்ளனர். நமது வடகிழக்கு மாகாணத்திலோ யுத்தத்தினால் இரண்டு இலட்சத்துக்கு அதிகமான வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. வீடுகளை புனரமைப்புச் செய்யக்கூடிய நிதியாதாரமும் குறைவாகவே உள்ளது. இந் நிலையில் செலவு குறைந்த வகையிலான வீடுகளின் நிர்மாணிக்கும் தொழில் நுட்பம் பற்றிய அறிவை எமது மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது அவசியமாகும். (செலவு குறைந்த வீடமைப்பு தொழில் நுட்பம் (Low Cost housing constracton Technic) என்பது தரம் குறைந்த வீடுகளை உற்பத்தி செய்வதாக கருதக் கூடாது தரமும் பாதுகாப்பும் கொண்ட வீடுகளைக் குறைந்த செலவீனத்தைக் கொண்டு அமைப்பதனையே இது கருதுகின்றது. அண்மைக் காலங்களாக அதிகரித்துவரும் சனத்தொகைப் பெருக்கம், வரையறுக்கப்பட்ட மூலவளம், கட்டட நிர்மாணத் துறையினால் ஏற்படும் சூழல் மாசடைதலும் மக்களின் சமூக பொருளாதாரத் தாக்கங்கள் போன்ற காரணங்களினால் குறைந்த செலவிற்கான தேவை எழுந்து வருகிறது. இந்த பிரச்சினைக்கான தீர்வைக்காண வேண்டிய தேவை எமது புத்திஜீவிகளுக்குரிய சவாலாக இருந்து வருகிறது. எனினும் இது தொடர்பான தொழில்நுட்பம் சார்ந்த புதிய யுக்திகள் அறிமுகம் செய்யப்படுவது மிக அரிதாகவே உள்ளது. இலங்கை பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம் (NERD) குறைந்த செலவிலான வீடுகளை அமைக்கும் பணியில் பல உத்திகளை அறிமுகம் செய்து வந்திருக்கிறது. இதுபற்றிய சில தகவல்களை உங்களோடு பகிருவதே இக்கட்டுரையினதும் ஒரு நோக்கமாகும். இத்தொழில் நுட்பமானது மூலப்பொருட்கள், காணி, நேரம், மூலதனம், ஆகியவற்றை நேரடியாக மீதப்படுத்துவதற்கான பல உத்திகளைக் கொண்டுள்ளது. இதுதொடர்பில் அவர்களினது பிரதானமான உத்தியானது தனித்தனியாக பொருட்களைத் தயாரித்து கட்டுமாணத்திற்கு இணைப்புச் செய்வதனூடாக சேமிப்பைப் பெறுவதாகும். அதாவது கூறு கூறாக வடிவமைக்கும் முறையாகும். இந்த வகையின் கீழ் பின்வரும் பிரதான கட்டட நிர்மாணப் பணிகளில் மாற்றங்கள் புகுத்தப்பட்டுள்ளன.

I.அடித்தளம்

II.தூண்

III.சுவர்

IV.கற்பலகை

V.கதவும் யன்னலும்

VI.கூரை

ஆகிய பிரதான கட்டட கூறுகளின் புதிய உத்திகள் புகுத்தப்பட்டுள்ளன. இத்தொழில்நுட்பமானது பின்வரும் நன்மைகளை இலக்குக் கொண்டதாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது.

I.குறைந்த மரப் பொருட்களின் பாவனைக்கூடாக மரங்களின் அழிவைக் கட்டுப்படுத்தலும் செலவை மீதப்படுத்தலும்

II.வேகமான கட்டுமாணத்தை நிறைவேற்றக்கூடியதாக அமைந்துள்ளது.

III. நேர மீதப்படுத்துதல்

IV.எளிய கட்டுமாண உபகரணங்கள்

V.இலகுவான அறிதிறன் நுட்பம்

இந்நுட்பங்களின் சில குறிப்பாக விடயங்களைப் பார்க்கும் போது அடித்தளம் அல்லது அத்திவாரத்தினை நிர்ணயிப்பதில் நிரல்கள் இணைக்கப்பட்டுள்ள பகுதிகளை மட்டும் தோண்டி அதில் இடப்படும் உறுதியான நிர்மாணத்துக்கூடாகக் கட்டடத்தினுடைய பாரத்தினைப் படிப்படியாக இதற்குக் கடத்துவதும் அடிப்பீடச்சட்டம், அடிப்பீடச்சுவர் என்பவற்றுக்கூடாக அத்திவார நிலையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த அது செலவுச் சுருக்கத்தினைக் கொண்டுவருகிறது.

அதேபோல சுவர்களை நிர்ணயிப்பதில் கல் அரிந்து பொருத்தும் முறைக்குப் பதிலாக நேரடியாக தொடர்சுவர்களை அமைத்துக்கொள்வதனூடாக சுவரை சாந்து பூசும் நிலை தவிர்க்கப்படுவதுடன் இலகுவாக நிர்மாண முறைகளையும் இது அறிமுகப்படுத்தியுள்ளது.

நிரல்களை (Colums) அமைப்பதால் முன் அமுக்கல், முன் அச்சமைப்பு நுட்பங்களுக்கூடாக தனித்தனியாகத் தேவையான நிரல்கள் உற்பத்தி செய்யப்படுவதுடன் ஒன்றுடன் ஒன்று முறையான வகையில் இணைப்புச் செய்யப்படக்கூடிய வகையிலும் இவை வடிவமைக்கப்பட்டுள்ளதனால் மாடிக கட்டடங்கள் அமைபதில் விரைவை ஏற்படுத்தலாம்.

இதனைவிட மாடிக் கட்டடங்களுக்குரிய நிர்மாணத்தின் போது பயன் படுத்துவதற்கென கற்பலகைகள் (Slabs) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றினால் தேவையான அலங்காரக் கற்பலகைகள் செய்யலாம். மேற்பூச்சு அவசியமில்லை. வேகமான நிர்மாணம் குறைந்த அமைப்பு வேலைகள் 40 வீத செலவு சேமிப்பு மரபுவழியிலான முண்டுகளின தேவை நீக்கப்படுகிறது. மரங்களின் கடுமையான தட்டுப்பாடு காரணமாக மாடிக்கட்டடங்களுக்கான முண்டுக்குரிய செலவு உயர்ந்துள்ளதுடன் இதனை ஒழுங்கமைப்பு செய்வதிலுள்ள சிரமங்களும் முற்றாக நீக்கப்படுகின்றது.

நேட் தொழில் நுட்பத்தின் மற்றொரு சாதனையாகக் கதவு, யன்னல்கள் என்பனவற்றுக்கான கொங்கிறீற் சட்டங்களைக் காணலாம். இவை அழிவற்றவை, பொதுவான மூலப் பொருட்களே பயன்படுத்தப்படுகிறது. எளிய தொழில்நுட்பம், செலவு சேமிப்பு, ஆகக்குறைந்த மரப்பாவனை போன்ற நன்மைகளைக் கொண்டவையாகும்.

கூரை அமைப்பின்போது பயன்படுத்தக்கூடிய பலபுதிய உத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. கொங்கிறீற் சட்டத்துடன் அஸ்பெற்றஸ் சீற்றுகள், சிறிய கூரை ஓடுகள், கொங்கிறீற் சட்டத்துடன் நாக அலுமினியத் தகடுகள் போன்றவற்றைக்கொண்ட புதிய தொழில்நுட்ப உத்திகள் கூரை மரங்களின் தேவையானது முற்றாகக் குறைந்துள்ளன.

இந்தவகையில் வீடமைப்புத் தொடர்பாகவும், கட்டட நிர்மானங்கள் தொடர்பாகவும் அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய பொருத்தப்பாங்கான தொழில்நுட்பத்தைப் பரவல் செய்வதற்கென புதிய முதலீட்டாளர்களின் முயற்சியாண்மை தேவைப்படுகிறது. வடகிழக்கில் புதிதாக அறிமுகமாகியுள்ள வீடமைப்பு புனர்நிர்மாணத்திட்டத்தின் (NEHRP) கீழ் ஏறக்குறைய 75,000 வீடுகள் புனரமைக்கப் படவுள்ளன.

இத்துடன் பல்வேறு நிதிமூலங்களுக்கூடாகவும், பொதுக்கட்டடங்களும், பாடசாலைகளும் புனரமைக்கப்படவுள்ளன. இந்நிலையில் செலவு

அ.கேதீஸ்வரன்
(அபிவிருத்தி அலுவலர்)

குறைவான தொழில் நுட்பத்தை இணைப்புச் செய்வத னூடாகத் தரமான தேவைக் குகந்த கட்டடங்களை நிர்மாணிக்கக்கூடிய வாய்ப்பைப் பயன்படுத்த நாம் முன்வர வேண்டும். இதுதொடர்பில் ஒப்பந்தக்காரர்கள், உள்ளீட்டு பொருள் வழங்குனர்கள், பொறியியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், முயற்சியாண்மையாளர் ஆகியோரின் கவனம் இத் தொழில நுட்ப பரவலுக்காகக் கவனம் செலுத்தவேண்டும். அதுவே நடைமுறைச் சாத்தியமான வழியுமாகும்.

# மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டிய முல்லை மாணவர்கள்

மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் முல்லை மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த வெற்றி பெற்றோரின் விபரம் வருமாறு:-

13 வயதுப்பிரிவில் உயரம் பாய்தல் போட்டியில் துணுக்காய் அ.த.க.பாடசாலை மாணவி பவித்தா மூன்றாம் இடத்தினையும், 19 வயதுப்பரிவில் 1500 மீற்றா ஓட்டத்தில் மு/பாண்டியன்குளம் ம.வி.மாணவி எஸ்.சோபனா முதலாம் இடத்தினையும், தேவிபுரம் ம.வி மாணவி ரி.ஜெயதர்சினி இரண்டாம் இடத்தினையும; பெற்றனர். ஈட்டி எறிதலில் வித்தியானந்தாக் கல்லூரி மாணவி யெ.சோபிதா மூன்றாம் இடத்தினையும், 3000மீற்றர் ஓட்டத்தில் தேவிபுரம் ம.வி மாணவி தி.ஜெயதர்சினி முதலாம் இடத்தினையும், 800 மீற்றர் ஓட்டத்தில் பாண்டியன்குளம் ம.வி மாணவி எஸ்.சோபனா மூன்றாம் இடத்தினையும், 100 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் யோகபுரம் ம.வி மாணவி கே. அனித்தா முதலாம் இடத்தினையும்,தட்டு எறிதல் போட்டியில் கொக்குளாய் அ.த.க பாடசாலை மாணவி ரி.ஜெயராணி முதலாம் இடத்தினையும், குண்டெறிதலில் இவர் இரண்டாம் இடத்தினைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உயரம் பாய்தலில் வித்தியானந்தாக் கல்லூரி மாணவி எஸ். ராஜ் அஜந்தினி முதலாம் இடத்தினை பெற்றுள்ளார். 400,800 மீற்ற ஓட்டத்தில் புதுக்குடியிருப்பு ம.வி மாணவன் எஸ். நிரஞ்சன் முதலாம் இடத்தினையும், 400 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் இவர் இரண்டாம் இடத்தினையும் பெற்றுள்ளார். தட்டு எறிதலில் கொக்குளாய் அ.த.க பாடசாலை மாணவன் ரி. தமிழ்க்குமரன் இரண்டாம் இடத்தினையும் பெற்றார்.

21 வயதின் கீழ்ப் பிரிவில் 800, 1500 மீற்றர் ஓட்டத்தின் முறையே, வற்றாப்பளை மகாவித்தியாலய மாணவன் கே.கோகுலரூபன் முறையே இரண்டாம், முதலாம் இடங்களையும் 5000 மீற்றர் ஓட்டத்தில் புதுக்குடியிருப்பு ம.வி. மாணவன் பி.பிரதீப் மூன்றாம் இடத்தினையும் பெற்றார். இப் போட்டியில் எஸ். நிரஞ்சன் 400 மீற்றர் ஓட்டத்தை 52 செக்கன்களில் ஓடிமுடித்து மாகாண மட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் 19 வயதுப்பிரிவு என்பது குறிப்பிடத்தக்கது. (20)

# உயர்தரப்பரீட்சை முடிவுகள் ஆகஸ்ட்-9இல் வெளியாகும்

(கொழும்பு)

க.பொ.த. உயர்தரப்பரீட்சை முடிவுகள் எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை வெளிவரும் என கல்வித்திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கான முடிவுகள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் எனவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான முடிவுகள் மறுநாள் 10ஆம் திகதி தபாலில் அனுப்பிவைக்கப்படும் எனவும் அந்த அதிகாரி கூறினார்.

இதேவேளை 9ஆம் திகதி கல்வித்திணைக்கள இணையத்தளத்தில் சகல பரீட்சார்த்திகளும் தமக்குரிய பரீட்சை முடிவுகளைப் பார்வையிட முடியும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

# சைப்பிரஸில் சுற்றிவளைத்துத் தேடுதல் 700 சட்டவிரோத குடியேறிகள் கைது

(கொழும்பு)

சைப்பிரஸ் பொலிசார் மேற்கொண்ட சுற்றிவளைப் பொன்றில் நாட்டில் தங்கியிருந்த எழுநூறு வரையா்ன சட்ட விரோத குடியேறிகள் கைது செய்யப்பட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கையில் ஆசிய ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த 700 வரையான வெளிநாட்டவர் கைது செய்யப்பட்டு தலைநகர் நிக்கோசியாவில் உள்ள பொலிஸ் தலைமையகத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இதே வேளை ஆயிரக்கணக்கான வெளிநாட்டவர் தமது நாட்டில் சட்ட விரோதமாக தொழில் செய்வதிலும் குற்றச் செயல்கள் புரிவதிலும் ஈடுபட்டு வருகின்றனர் என சைப்பிரஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.




# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

## "ஒலிம்பிக்கின் சாதனை வீரர்கள்"

இன்னும் சில தினங்களில் எதென்ஸ் நகரில் ஒலிம்பிக் திருவிழா நடைபெற விருப்பது யாவரும் அறிந்ததே. இதன் போது பல அரிய சாதனைகள் நிகழலாம் என்பதை மறுக்க முடியாது.

அந்த வகையில் கடந்த போட்டிகளிலும் சாதனைகள் நிகழ்ந்துள் ளதைப் பதிவுகள்• எடுத்துக் கூறுகின்றன. அமெரிக்காவின் பொப்பீமன் என்பவர் 1984 ஆம் ஆண்டில் லொஸ் ஏஞ்சல்ஸில் தான் போட்டியில் பங்குபற்ற முன்கூறியதாவது ' நான் நீளம்பாய்தலில் 27 அல்லது 28 அடி யைக் கடக்க வேண்டும் என்பதற்காகவே பயிற்சி எடுத்தேன்" அது 29 அடியாக இருக்கும் என தான் எதிர்பார்த்திருக்க வில்லை என 1968 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம் பிக் போட்டியில் 29 அடி 2½ அங்குலம் நீளம் பாய்ந்து சாதனை படைத்தமை பற்றி கூறும் போது அவர் அவ்வாறு கூறினார். அதற்கு முன்பு 27 அடி 4.25 அங்குலமே சாதனை யாகவிருந்தது.



அவர் இந்த 29 அடி தூரத்தைப் பாய்ந்து நடத்திய சாதனை பற்றி உலகத்தோர் மட்டுமன்றி தாமும் வியப்பில் ஆழ்ந்ததாக பொப்பீமன் தெரிவித்தார்.

அதன் பிறகு 1984 ஆம் ஆண்டு அச்சாதனையை முறியடிக்க கார்ல்லூயிஸ் முயற்சி செய்தாலும் அவர் 28 அடி 10 அங்குல தூரத்தை மட்டுமே பாய்ந்தார். அவர் அப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றாலும் சாதனை முறியடிக்கப்படாதிருந்ததாயினும் சுமார் 33 ஆண்டுகளின் பின்னர் அதாவது 2001 ஆம் ஆண்டு அதே நாட்டைச் சேர்ந்த(அமெரிக்கா) மைக்பவல் என்பவரால் அது முறியடிக்கப்பட்டது. அந்த சாதனையை முறியடிக்க கார்ல்லூயிஸ் முயன்றாலும் சாத்தியமாகவில்லை. லூயிஸ் 1984 ஒலிம்பிக் போட்டிகளில் நான்கு தங்கப்பதக்கங்களை வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வென்றது யார்?

ஆசியக்கிண்ணத்தைச் சிறிலங்கா அணி கைப்பற்றினாலும் அதன் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் வழமை போன்று பிரகாசிக்கத்தவறியமை கிரிக்கெட் உலகத்தின் கவனத்தைப் பெற்றுள்ளது.



நடந்துமுடிந்த ஆசியக் கிண்ணப் போட்டியில் முரளியால் ஐந்து போட்டிகளில் விளையாடி ஆறு விக்கெட்டுக்களை மாத்திரமே கைப்பற்ற முடிந்ததுடன் இறுதிப்போட்டியில் அதிக ஓட்டங்களைக்கொடுத்து விக்கெட் எதனையும் கைப்பற்ற முடியாது போனமையுமே அவர் மீதான கவனத்தை ஈர்த்துள்ளது.

அவர் இதுவரை காலமும் வீசிவந்த சர்ச்சைக்குரிய 'துஸ்ரா' பந்துவீச்சை தடைசெய்ததன் பின்னர் ஏற்பட்டு விட்ட மாற்றமா? அன்றி ஆசிய வீரர்கள் முரளியின் பந்துவீச்சை எதிர்கொள் வதற்குத் தேர்ச்சி பெற்று விட்டனரா? என்ற கருத்துக் களை இது வலுவாக்கி யுள்ளது.

ஆனால் துஸ்ரா பந்துவீச்சு தொட[illegible]க அவருக்கு கொடுக்கப்பட்ட நெருக்கடிகள் [illegible]வரை மனரீதியாகப்பாதித்து விட்டதே அவர் திறமையாகப் பிரகாசிக்கத் தவறிவிட்டார் என்ற முடிவுக்கு வருவது பொருத்தமானதாக இருக்கும். ஏனெனில் கடந்த சில மாதங்களில் முரளி பல சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டதுடன் எச்சரிக்கவும்பட்டமையுமே.

இது முரளியின் பந்து வீச்சை எதிர்கொள்வதற்கு தடுமாறும் துடுப்பாட்ட வீரர்களுக்கு ஆறுதல் அளிக்கும் ஒன்றாக அமைந்திருக்கும். அதேவேளை முரளியை ஓரங்கட்ட கடும் பிரயத்தனங்களை மேற் கொண்டுள்ள மேற்கத்தையருக்கு சந்தோசமான செய்தியாகவும் இருக்கும்.

ஆனால் முரளியைப் பொறுத்தமட்டில் ஒரு நாள்போட்டியைவிட டெஸ்ட் போட்டிகளிலேயே அதிக கவனம் செலத்தி வருகிறார்.

ஒரு நாள் போட்டியில் அதிக ஓட்டங்களைக் கொடுக்காது கட்டுப்படுத்தி எதிரணிக்கு நெருக்கடியைக் கொடுப்பதே முரளியின் பாணியாகும்.

எனவே முரளி ஆசியக் கிண்ணப் போட்டியில் அதிக ஓட்டங்களை விட்டுக்கொடுத்தார் என்பதற்காக அவரின் திறமையைக் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது.

சிறிலங்கா கிரிக்கெட் அணியின் வெற்றியோ அன்றி கௌரவமான தோல்வியோ முரளிதரன் அணியில் இடம்பெறும் பட்சத்திலேயே அணிக்கு கிடைக்கும் என்பது எவரும் மறுக்க முடியாத ஒன்று என்ற நிலை தொடர்ந்தும் நீடித்து வரும் [illegible]ன்றாகவே இருக்கிறது.

ஆனாலும் நடந்துமுடிந்த [illegible]சியக்கிண்ணப்போட்டி முரளிக்கு [illegible]கொடுக்கவில்லை என்பது அவரையும் அவரது ரசிகர்களையும் கவலையில் ஆழ்த்தியிருக்குமே தவிர அவரது திறமை மங்கிப் போய்விட்டது என்று கூறுவது பொருத்தமற்றது.

காலத்துக்கும் நேரத்துக்கும் ஏற்ப தனது பந்துவீச்சுப் பாணியை மாற்றிக் கொள்ளும் முரளி சிறிலங்காவில் நடைபெறவுள்ள தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் தனது திறமையை நிரூபித்து தனது பந்து வீச்சில் ஏற்பட்டுள்ள திறமையின்மையை போக்குவா என்பதே அவரது ரசிகர்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

## கனவு கலைந்தது

சிறிலங்கா கிரிக்கெட் அணி 3ஆவது முறையாக ஆசியக் கிண்ணத்தைக் கைப்பற்றி ஆசியாவில் தானே சாம்பியன் என்பதை நிரூபித்துள்ளது.

சென்ற போட்டிகளைப் போலல்லாது இப்போட்டியில் ஆறு நாடுகள் பங்குபற் றின. அவற்றுள் அனைவரும் எதிர்பார்க கப்பட்டவாறு மூன்று பலமிகுந்த அணிக ளுக்கிடையிலேயே போட்டிகள் வலுப் பெற்றன.



இத்தொடரில் முதலாவது லீக் போட்டி களில் பாகிஸ்தான், இந்திய அணிகள் பலம் குறைந்த அணிகளை வெற்றி பெற்றாலும் இரு அணிகளும் சிறிலங்கா அணியுடனான போட்டிகளில் தடுமாறியதை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

சிறிலங்கா அணி இப்போட்டித் தொடரில் ஒரு போட்டியில் மட்டுமே தோல்வியைத் தழுவியது மட்டுமன்றி ஆசியக்கிண்ணத்தை இருமுறை வென்ற பாகிஸ்தானை மிகச் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்கச் செய் தமை விசேட அம்சமாகும். பாகிஸ்தான் அணியில் சிறப்பான துடுப்பாட்ட வீரர்கள் இருந்தும் கடந்த 21 ஆம்திகதி நடைபெற்ற முதலாவது சுப்பர்லீக் போட்டியில் 7 விக் கெட்டுக்களால் சிறிலங்கா அணியிடம் தோல்விகண்டதும் 122 ஓட்டங்களுக்கு ஆட்ட மிழந்ததும் ஆசிய கிண்ணப் போட்டிகளில் மறக்க முடியாத சம்பவம் எனலாம். இவ்வளவிற்கும் சிறிலங்காவின் பந்து வீச்சாளர்களினதும் களத்தடுப்பாளர் களினதும் சிறப்பை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது. இப்போட்டியில் நுவான் சொய்சா, அறிமுக வீரர் மஹ்ருப் தமது பந்து வீச்சின் திறமையை வெளிக்காட்டினர். ஆயினும் பாகிஸ்தான் வீரர்கள் இந்திய அணியுடனான போட்டியில் 59 ஓட் டங்களால் வென்றதும் அது இறுதிப் போட்டி க்குள் பிரவேசித்துவிடும் என்று கருதப் பட்டது. எனினும் அதன் துரதிர்ஷ்டம் சிறிலங்கா அணி இந்தியாவிடம் 4 ஓட்டங்களால் தோல்வியடைந்தமை அக்கனவை முடிவிற்குக் கொண்டு வந்துவிட்டது. 4 ஓட்டங்களால் வென்ற இந் திய அணி இறுதிப்போட்டிக்குத் தெரி வாகாமல் இருந்திருப்பின் 59 ஓட்டங்களால் இந்தியாவைத் தோல்விகாணச்செய்த பாகிஸ்தான் ஆசியக் கிண்ணத்தைத் தக்க வைத்திருக்கவும் வாய்ப்புக் கிட்டியி ருக்கலாம்.

போட்டிகளுக்கு முன்பு போட்டியைத் தாமே வெற்றிகொள்வோம் என இந்திய அணித்தலைவர் கங்குலி பல தடவை கூறியிருந்தமை அவர்களின் வாய் வீச்சில் வீரம்காட்டுவதாகவே அமைந்துவிட்டது. அதாவது வேறெந்த அணிகளைப் போலன்றி இந்திய அணி எப்போதும் மார்தட்டிப் பேசு வதையே அவதானிக்க முடிந்துள்ளது.



உண்மையில் தற்போதைய இந்திய அணி அதன் துடுப்பாட்ட வரிசையையும் பந்துவீச்சு வரிசையையும் குறைகூற முடியா தளவிற்கு தற்பொதும் இருக்கின்றது என் பது மறுக்க முடியாத ஒன்றுதான். ஆனால் சிறிலங்கா வீரர்களின் அபார களத்தடுப்பு பந்து வீச்சு என்பன அவர் களின் சொந்த மண்ணில் இந்திய வீரர்க ளை நிலைத் திருக்க விட வில்லை.

இந்திய அணி பலமுள்ள அணி என்று கருதப்பட் டாலும் அது அதிஸ்ரமற்ற அணியாகவே மாறியிருக் கிறது. பல போட்டிகளில் இறுதியாட்டம் வரை முன் னேறி வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்ற முடியாமல் போனமை யும் அதன் வரலாற்றில் வருந்தத்தக்கதே.

எது எவ்வாறு இருப் பினும் சிறிலங்கா அணிக்குக்கிடைத்துள்ள இம்மகத்தான வெற்றி தென்னா பிரிக்காவுடன் ஆரம்ப மாகவுள்ள கிரிக்கெட் தொடரை உற்சா கமாக எதிர்கொள்ள வாய்ப்பாக அமைந் துள்ளது.

வடிவேல்

# உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு
# வடக்கு-கிழக்கு மாகாணசபை

## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான புனரமைப்புத் திட்டம் (கார்ப்)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆஅவ" கடன் இல.2043-SRI (SF)
(பகுதி C- சமுதாய மீளமைப்பும் அபிவிருத்தியும்)

# கேள்வி அறிவித்தல்-02

## கட்டட நிர்மாணவேலைகளைப் பெறுதல்

01. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச ங்களுக்கான புனரமைப்புத்திட்டத்தின் (CAARP)ஆகுசெலவு சார்பாக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்காக இந்தக் கடனின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02 இதன் பின்னகத்து தொழில் தருனராக குறிப்பிடப்படும் (CAARP) கருத்திட்ட கேள்விச்சபையின் தலைவர் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஒப்பந்தங்களுக்கு தகுதிவாய்ந்த கேள்வி தாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

| தொடர் இலக்கம் | ஒப்பந்த இனங்காட்டல் இலக்கம் | கேள்வியின் பெயர் | ஆகக் குறைந்த ITCAD பதிவு | கேள்வி பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | கே.என்/கார்ப்/ஈடி/09 | கிளி/இயக்கச்சி அ.த.க.பாடசாலையில் 5 வகுப்பறைகளும் அதிபர் அலுவலகமும் கொண்ட 120'X25' கட்டட நிர்மாணம் | எம் 8 | 20000.00 |
| 02 | கே.என்/கார்ப்/ஈடி/10 | கிளி/மாசார் அ.த.க.பாடசாலையில்5 வகுப்பறைகளும் அதிபர் அலுவலகமும் கொண்ட 120'X25' கட்டட மீள்நிர்மாணம் | எம் 8 | 20000.00 |
| 03 | கே.என்/கார்ப்/ஈடி/11 | கிளி/கறுக்காய்த் தீவு அ.த.க. பாடசாலையில் 9 வகுப்பறைகளும், அதிபர் அலுவலகமும் கொண்ட 110'X25' இருமாடிக் கட்டட மீள்நிர்மாணம். | எம் 7 | 43000.00 |
| 04 | கே.என்/கார்ப்/ஈடி/12 | கிளி/ஜெயபுரம் அ.த.க. பாடசாலையில் 5 வகுப்பறைகளும், அதிபர் அலுவலகமும் கொண்ட 120'X25' கட்டட மீள்நிர்மாணம். | எம் 8 | 20000.00 |
| 05 | கே.என்/கார்ப்/ஈடி/13 | கிளி/வலைப்பாடு றோ.க.த.க.பாடசாலையில் 9 வகுப்பறைகளும், அதிபர் அலுவலகமும் கொண்ட 110'X25' இருமாடிக் கட்டட மீள்நிர்மாணம். | எம் 7 | 43000.00 |
| 06 | கே.என்/கார்ப்/ஈடி/14 | கிளி/சோரன்பற்று கணேசா வித்தியாலயத்தில் 5 வகுப்பறைகளும் அதிபர் அலுவலகமும் கொண்ட 70'X25' இருமாடிக் கட்டட நிர்மாணம். | எம் 7 | 30000.00 |
| 07 | கே.என்/கார்ப்/எச்.எஸ்/03 | பூநகரியில் சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக்கட்டட மீள்நிர்மாணம் | எம் 7 | 22000.00 |
| 08 | கே.என்/கார்ப்/எச்.எஸ்/04 | உருத்திரபுரத்தில் சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக் கட்டட மீள்நிர்மாணம் | எம் 7 | 22000.00 |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கேள்விகள் திறந்துள்ளது.

I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர், பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்,

II. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன் கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் 2003 யூலை 1ஆம் திகதிக்குப் பின்பு தங்களைப் பதிவு செய்த கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஒப்பந்தக்காரர்கள் இது போன்ற வேலைகளை அல்லது இதற்குச் சமமான வேலைகளை ஒப்பந்தக்காரர்களாக அல்லது உப ஒப்பந்தக்காரர்களாக செய்திருத்தல் வேண்டும். இதற்கு வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்களின் மூலம் ஆதாரப்படுத்தப்பட வேண்டும். இக் காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர் வேண்டப்படுகின்றனர்.

III. இக்டாட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பெறுப்பேற்பவர் போதிய கேள்வி கோரும் ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

IV. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது .

V. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

04. மேற்படி பந்தி 2இல் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்கு கேள்விகள் கோரலாம். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பான கேள்வியாக அமைய வேண்டும். ஏதேனும் ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை " கார்ப" திட்டத்தின் கீழ் நடைமுறையில் இருக்கும் ஒப்பந்தம் உட்பட மூன்றாகும் அல்லது 2003 யூலை 1ஆம் திகதிக்கு பின்பு தங்களைப் பதிவு செய்த கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஒப்பந்தக்காரர்கள் இது போன்ற வேலைகளை அல்லது இதற்குச் சமமான வேலைகளை ஒப்பந்தக்காரர்களாகவோ, அல்லது உப ஒப்பந்தக்காரர்களாகச் செய்திருந்தால் "கார்ப" திட்டத்தின் கீழ் ஒரு நேரத்தில் ஆகக் கூடுதலாக பெற்றுக் கொள்ளக்கூடிய ஒப்பந்தம் ஒன்றாகும்.

05. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர் மேலதிக தகவல்களை கேள்விப் படிவத்திலிருந்து பெறமுடியும் என்பதுடன், கேள்வி ஆவணங்களை வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்) மாவட்ட செயலகம், கிளிநொச்சி என்ற விலாசத்திலுள்ள மாவட்டப் பிரதி திட்டப்பணிப்பாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(9ஆம் பக்கம் பார்க்க)

# புளொட் மோகனுடன் நீண்டகாலம் இருந்தவர் கொலைக்கு உதவினாராம்

## ஆரம்ப விசாரணையில் தெரிவிப்பு

நீண்ட காலம் உடனிருந்து செயற்பட்ட ஒருவரே ஒன்றாகச் சென்று புளொட் மோகனின் கொலைக்குத் துணைபுரிந்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளை மேற்கொள்ளும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த இவர் கொழும்பில் தங்கியிருந்த தனியார் விடுதியின் உரிமையாளர் உள்ளிட்ட விடுதியில் தங்கி யிருந்த பலர் விசாரணைக்கு உள்ளாக்கப் பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்பட டுள்ளது. பம்பலப்பிட்டி யில்கடந்த சனிக்கிழமை புளொட்மோகன் கொல்லப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் தொடர்கின்றன. புளொட் மோகனின் மனைவி, துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட வேளையில் புளொட் மோகன் பயணம் செய்த முச்சக்கர வண்டியின் ஓட்டுநர் உட்பட்ட பலரிடம் வாக்கு மூலங்கள் பெறப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

புளொட்மோகன் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மட்டக் களப்பில் வெளிப்படையாகவே படையினருடன் இணைந்து செயற் பட்டவர் எனவும், இராணுவப் புல னாய்வுப்பிரிவின் நீண்டகால முக் கியஸ்தராக தொழிற்பட்டவர் என்பதும் தெரிந்ததே.


## பட்டமளிப்பு விழா-2004

**வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகம்**

இடம் :கலாச்சார மண்டபம்
A9 பிரதான சாலை,
டிப்போச்சந்தி, கிளிநொச்சி
காலம் :08 ஓகஸ்ட் -2004
நேரம் :காலை 10.30 மணி
பிரதம விருந்தினர் :பேராசிரியர் S.மோகனதாஸ்,
துணைவேந்தர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ள 2003/2004 கல்வியாண்டில் பாடநெறிகளை பூர்த்தி செய்த பட்டதாரிகள் உடனடியாக நேரிலோ அன்றி தொலைபேசி இலக்கம் *021228-5875* இன்ஊடாகவோ அன்றி மின்னஞ்சல் *Registrar@vanni.org* இன்ஊடாகவோ பதிவாளருடன் தொடர்பு கொள்வதுடன் உங்களுக்குரிய பதிவினையும் உறுதிப்படுத்திக் கொள்ளவும்

(4864) நிர்வாகம்



## முக்கிய அறிவித்தல்

ஐயன்குளம் தென்னியங்குளம் பகுதியில் பயிர்களை மேய்ந்து கொண்டிருந்த வேளை பிடிக்கப்பட்ட கால்நடைகள் கமக்கார அமைப்பில் பாராமரிப்பில் உள்ளது. உரியவர்கள் எதிர்வரும் 10.08.04 செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் எம்முடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன், தவறும் பட்சத்தில் 10.08.04 செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணிக்கு உரிய கிராமத்தில் ஏலம்விடப்படும் என அறியத்தரு கின்றோம். கால்நடைகளின் விபரம்:-

1.சிவப்பு நாகு k.v குறியீடு

2.வெள்ளைப் பசு குறியீடு Y.R
இலக்கம் 102 ஐயன்குளத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

03. வெள்ளை எருது தென்னியன் குளத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

தகவல்
இணைப்பாளர்,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
துணுக்காய்ப் பிரதேசம்,
முல்லை மாவட்டம்.

(சி-10054)



# தமிழீழ வைப்பகம்

# பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர் களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

01. பணிநிலை :- பண்ணை முகாமையாளர் [தரம்- 03]

தகைமை :- ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் விவசாய விஞ்ஞானப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

அல்லது

ஏற்றுக்கொள்ளப்பட்ட விவசாயக் கல்வி நிறுவனமொன்றின் பொருத்தமான கற்கை நெறியினைப் பூர்த்தி செய்திருப்பதுடன், பண்ணைமுகாமைத் துறையில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் பட்டறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

பண்ணை முகாமைத்துறையில் குறைந்ததுஏழு (07) ஆண்டுகள் பட்டறிவுடையவராக இருத்தல் வேண்டும்.

அகவை :- 30 ஆண்டுகளிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.

மாதாந்த ஊதியம்:-

$$\frac{8,000 - 12,000}{200 \times 20} + 4,000$$

02. பணிநிலை :- பண்ணை மேற்பார்வையாளர் [தரம் 03]

தகைமை :- பண்ணை மேற்பார்வை தொடர்பில் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டுகளிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.

அகவை :- 30 ஆண்டுகளிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.

மாதாந்த ஊதியம:-

$$\frac{6,000 - 9,000}{150 \times 20} + 4,000$$

மேற்காட்டப்பட்ட பணிநிலைக்குத் தகுதியானவர்கள் தம்மால் தயாரிக்கப்பட்ட சுயவிபரங்களுடனும், கீழ்க்காட்டப்படும் ஆவணங்களுடனும் திருநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பக நடுவப்பணியகத்திற்கு 2004.08.11 ஆம் நாள் புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வருகை தருமாறு வேண்டப்படுகின்றனர்.

01. கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்
02. ஏனைய தகைமைகளையும், பட்டறிவையும் உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
03. ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்.
04. நற்சாட்சிப் பத்திரங்கள்.

மேலாளர்,
ஆளுகைப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி.9766)



06. கேள்வி ஆவணங்களை 2004 ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதியிலிருந்து ஓகஸ்ட் மாதம் 23ஆம் திகதி வரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 1000/த்தை (கேள்வி ஆவணம் ஒன்றுக்கு) செலுத்தி கொள்வனவு செய்து கொள்ளலாம்.

07. கேள்வி கோருபவர்களுக்கான பணிப்புரையின் பிரிவு ை வாசகம் ைை குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான கேள்வி அடங்கிய ஆவணங்களை இது தொடர்பாக பந்தி 8இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம்,திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுடன் இணங்கும் வகையில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

08. அரசுக்கு முத்திரையிட்ட கேள்விகள் உரிய பிணைப்பணத்துடன் தலைவர், மாவட்ட கேள்விச் சபை, நிகொட் கருத்திட்டம், கச்சேரி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு 2004 ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும் கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

09. கேள்வி சம்பந்தப்பட்ட கூட்டமொன்று ஓகஸ்ட் 16ஆம் திகதி அன்று முற்பகல் 10.30 மணிக்கு கச்சேரியில் நடைபெறும்.

10. கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்விதாரகளுக்கு ஏற்படும் ஏதாவது ஆகு செலவுகளுக்குஅல்லது செலவீனங்களுக்கு தொழில் தருணர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

தி.இராசநாயகம்,
தலைவர், மாவட்ட கேள்விச் சபை,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்,

(சி-10051)

# 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியிலும் இங்கிலாந்து அணி 256 ஓட்டங்களால் வெற்றி

இங்கிலாந்து அணிக்கும் மேற்கிந்தியதீவுகள் அணிக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 256 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.


பிளிண்டொப்

இந்த வெற்றியுடன் நான்கு டெஸ்ட் போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 2-0 என்ற நிலையில் இங்கிலாந்து அணி முன்னிலை பெற்றுள்ளது.

கடந்த 29ஆம் திகதி இரு அணிகளுக்கும் இடை யிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஆரம்பமானது.

இதில் இங்கிலாந்து அணி தனது முதலாவது இனிங்சில் ஒன்பது விக்கெட் இழப்பிற்கு 566 ஓட்டங்களைப் பெற்றது.

இங்கிலாந்து துடுப்பாட்டத்தில் அன்ரு பிளிண்டொப் 167 ஓட்டங்களையும், மார்க்கஸ் ரெஸ்கொதிக் 105 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பிறைவோ நான்கு விக்கெட்டுக்களையும், கொலிமோர் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.


பதிலுக்குத் தனது முதலாவது இனிங்சிற்காக மேற்கிந்தியதீவு 336 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

ராம் நரேஷ் சர்வான் 139 ஓட்டங்களையும், பிறையன் லாறா 95 ஓட்டங்களையும் பெற்றனர்.

தனது இரண்டாவது இனிங்சை 250 ஓட்டங்கள் முன் னிலையில் ஆரம்பித்த இங்கிலாந்து 248 ஓட்டங்களுக்கு சகல விக் கெட்டுக்களையும் இழந்தது.

479 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியதீவு 222 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் கிறிஸ் ஹயில் அதிக பட்சமாக 82 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் 20இற்கும் குறைவான ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் அஸ்லி ஹைல்ஸ் ஐந்து விக்கெட்டுக்களையும், மத்தியு ஹொக்காட் மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.


ரொஸ் கொதிக்

போட்டியின் சிறப்பாட்டக்காரராக இங்கிலாந்தின் சகல துறை வீரர் அன்ரு பிளிண்டொப் தெரிவானார்.

## கிரிக்கெட் ஆடியபோது பந்துபட்டு 8 வயதுச் சிறுவன் உயிரிழப்பு

கிரிக்கெட் ஆட்டத்தின்போது நெஞ்சில் பந்து பட்டதில் 8 வயது வீரர் திலீப்குமார் உயிரிழந்த சம்பவம் ஒன்று இந்திய பாடசாலை அணிகளுக்கு இடையிலான போட்டியின் போது இடம் பெற்றுள்ளது. ஶ்ரீகாகுளம் அரசினர் கலைக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மாவட்டங்களுககிடையிலான போட்டியில் விஜயநகரம் அணிக்காக ஆடிய திலீப்குமார், எதிரணி வீரர் வீசி உயர எழும்பி வந்த பந்து, அவரது நெஞ்சில் பட்ட சிறிதுநேரத்தில் நிலை குலைந்து கீழே விழுந்துள்ளார். உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டாலும், முன்னதாகவே இறந்துவிட்டதாக டாக்டர் குழு தெரிவித்துள்ளது.

## நாளை ஆரம்பமாகும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இயன் டானியல்

சிறிலங்காவுக்குச் சுற்றுலாவை மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும் சிறிலங்கா அணிக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நாளை ஆரம்பமாகின்றது.

இப்போட்டிக்கான சிறிலங்கா அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் அவுஸ்திரேலிய சுற்றுப் பயணத்தில் இடம்பெற்ற ரசல் ஆனல்ட்டுக்குப் பதிலாக இயன் டானியல் இணைக்கப்பட்டுள்ளார்.

அண்மைக்காலமாக திறமைகாட்டி வரும் இவர் சிறலங்கா 'ஏ' அணியில் இடம்பெற்று இங்கிலாந்து சுற்றுப் பயணத்தில் சிறப்பாக திறமை காட்டியதால் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

இயன் டானியல் சிறிலங்கா அணியில் இடம்பெற்றுள்ள மற்றுமொரு சிறுபான்மை இனத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### மூவருக்கு அபராதம்

சிறிலங்கா கிரிக்கெட் வீரர்கள் மூவருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற இந்திய அணிக்கு எதிரான ஆசியக் கோப்பை இறுதிப்போட்டியில் முகமட் ஹைவ்,ஹர்பஜன்சிங்கிற்கு எதிராக தகாதவார்த்தைகளை பிரயோகித்தார்கள் என்ற குற்றச்சாட்டையடுத்தே அன்றைய போட்டி வருமானத்தில் இருவருக்கு அரைவாசி தண்டமாகவும் சங்கக்காரவுக்கு முழுப்பணமும் அறவிடப்பட்டுள்ளது. டில்சான், உபுல்சந்தன ஆகியோரே வார்த்தைப் பிரயோகத்தை மேற்கொண்ட மற்றைய இருவருமாகும்.

## திறமையுடன் விளையாட முடியாது போனதே தோல்விக்கு காரணம்-டால்மியா



ஆசியக் கோப்பை கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இந்திய அணியினர் முழுத்திறமையுடன் விளையாட முடியாமல் போனதே தோல்விக்கு காரணம் என இந்திய கிரிக்கெட்வாரியத் தலைவர் ஜாக் மோகன் டால்மியா தெரிவித்துள்ளார்.

ஆசியக் கோப்பை கிரிக்கெட் இறுதிப் போட்டிக்காக கொழும்பு வந்த டால்மியா, நேற்று நாடுதிரும்பினார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சிறிலங்காவுக்கு எதிரான ஆசியக்கோப்பை இறுதிப்போட்டியில் இந்திய அணி தோல்வி அடைய துடுப்பாட்டவீரர்கள் சரியாக விளையாடாததும் நாணயச் சுழற்சியில் வெற்றிபெறாததும் தான் காரணம் என்றார்.


## ஆசியக் கோப்பை கால்பந்து தென் கொரியா வெளியேற்றம்

சீனாவில் நடைபெற்றுவரும் ஆசியக் கோப்பை கால்பந்தாட்டத்தில் ஜப்பான், ஈரான அணிகள் அரையிறுதி ஆட்டத்துக்கு முன்னேறியுள்ளன. பீஜிங்கில் சனிக்கிழமை நடைபெற்ற விறுவிறுப்பான காலிறுதி ஆட்டத்தில் 3 முறை சம்பியன், ஈரானிடம் உலகக்கோப்பை போட்டியில் அரையிறுதியில் விளையாடிய தென்கொரியா பெனால்டி சூட் அவுட்டில் 4-3 என்ற கோல் கணக்கில் தோல்வியுற்று வெளியேறியது. இவ் வெற்றியையடுத்து, போட்டியை நடத்தும் சீனாவுடன் அரையிறுதி மோதல் நிகழ்த்த உள்ளது ஈரான். மற்றொரு ஆட்டத்தில் நடப்புச் சம்பியன் ஜப்பான் 4-3 என்ற கோல் (பெனால்டி சூட் அவுட்) கணக்கில் ஜோர்தானை வெளி யேற்றியது. அடுத்து, பலம் குறைந்த அணியாகக் கருதப்படும் பஹ்ரைனுடன் இன்று அரையிறுதி ஆட்டத்தில் விளையாடுகிறது ஜப்பான்.

-எ.டி.பி.டென்னிஸ்போட்டி-

## இறுதியாட்டத்தில் பெடரரை எதிர்கொள்கின்றார் ரொடிக்


ரோஜர் பெடரர்


ரொடிக்

கனடாவில் நடைபெற்று வரும் எ.டி.பி. மாஸ்டர் டென்னிஸ் போட்டியின் இறுதிப் போட்டியின் இறுதிப் போட்டிக்கு நடப்பு சம்பியன் அண்டி ரொடிக்கும் சுவிஸ் வீரர் ரோஜர் பெடரரும் தகுதி பெற்றுள்ளனர்.

ரொரன்ரோவில் நடைபெற்று வரும் போட்டியின் அரையிறுதியாட்டத்தில் ஜேர்மனி வீரர் நிக்கலாஸ் கிப்பரை நடப்பு சம்பியனான அண்டிரொடிக் 7-5,6-3 என்ற நேர்செட்டில தோற்கடித்து இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

மற்றொரு அரையிறு தியாட்டத்தில் முதல் நிலை வீரரான ரோஜர் பெடரர் சுவிடன் வீரர் தோமஸ் ஜோகன்சனை எதிர்கொண்டு 4-6,6-3,6-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றார்.




## ரசிகர்கள் அவதி

ஆசியக்கோப்பை இறுதி ஆட்டத்தைக் காண்பதற்காக கொழும்பு சென்ற இந்திய ரசிகர்கள் தங்க இடமில்லாமல் அவதிப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. சாதாரண ஹோட்டல் முதல் நட்சத்திர ஹோட்டல் வரை நகரில் உள்ள அனைத்து ஹோட்டல்களிலும் சனிக்கிழமை பகல் முதலே அறைகள் கிடைக்கவில்லை எனவும், இதனால் பல ரசிகர்கள் பெரும் துயரத்துக்கு உள்ளானார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஒலிம்பிக் சம்பியன் மொறிஸ்கிறீனின் சாதனையை முறியடித்தார் அஸபா பவல்

ஜமேக்கா நாட்டின் அஸபா பவல் அமெரிக்காவின் ஒலிம்பிக் சம்பியனான மோறிஸ் கிறீனை வென்றுள்ளார். கடந்த வெள்ளியன்று லண்டன் கிராண்ட் பிறிக்ஸ் போட்டியில் நூறு மீற்றர் ஓட்டத்தை 9.91 செக்கனில் ஓடினார். கிறீன் 9.97 செக்கன்களில் ஓடினார். லேனார்ட் ஸ்கொட் என்ற அமெரிக்க வீரர் 10.04 செக்கனில் ஓடி மூன்றாம் இடத்தைப் பெற்றார். மிகச் சிறந்த வீரர்களான பிரிட்டனின் ஜேசன் காட்னர், டரன் கெம்பல், மார்க் லூயிஸ் பிரான்சிஸ் ஆகியோர் தோல்வியடைந்தனர்.

இது குறித்து பவல் தெரிவிக்கும்போது வெல்ல முடியாத கிறீனை வெல்வதே தமது நோக்கமாக இருந்ததாகத் தெரிவித்துள்ளார். இதனை விடவும் வேகமாக ஓட முடிந்திருக்கும் எனவும் கூறிய அவர், ஆனால் ஆரம்பம் என்னை பின்தள்ளியது என்றார். ஆயினும் மொறிஸ் கிறீன் இது பற்றி கூறும்போது தனக்கு இது பின்னடைவாயினும் எதென்சில் ஒலிம்பிக்கில் தங்கம் வெல்வதே தனது இலக்கு என்றார். தனது ஆரம்பம் சற்று குழப்பமானதாக இருப்பினும் பவலின் ஓட்டம் திறமையானதாக இருந்ததாக தெரிவித்தார்.

இதற்கிடையில் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் ரஷ்யாவின் எலினா இசின்பயேவா 4.90 மீற்றர் பாய்ந்து சாதனை படைத்தார்.

### மெய்வல்லுநர் சம்மேளனம் கலைக்கப்பட்டது

தேசிய மெய்வல்லுநர் சம்மேளனம் நேற்று கலைக்கப்பட்டுள்ளது. சம்மேளனம் தொடர்பாக எழுந்த குற்றச்சாட்டுக்களை அடுத்து அதற்கென அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் பேரில் இந்தக் கலைப்பு இடம்பெற்றுள்ளது. இந்நிலையில் சம்மேளனத்திற்குப் பதிலாக தற்சமயம் இடைக்கால சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.(32)

## புனித சவேரியார் கல்லூரி கால்பந்து அணிக்கு தென்கொரியாவில் சிறப்பான வெற்றி

சர்வமத சமாதான அகில இலங்கை சுற்றுப்போட்டியில் முதலிடத்தைப் பெற்று கடந்த 22ஆம் திகதி தென்கொரியா சென்ற மன்னார் புனித சவேரியார் தேசிய ஆண்கள் கல்லூரி கால்பந்து அணி அங்கு நடைபெற்ற போட்டியில் சிறப்பு வெற்றிகளைப் பெற்று நாடு திரும்பியுள்ளது.

கொரியா 'ஆசான்' விளையாட்டரங்கில் நடைபெற்ற போட்டிகளில் முதலில் இலங்கை சார்பில் மன்னார் புனிதசபேரியார் ஆண்கள் கல்லூரி, சிங்கப்பூர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆடி 3-1 என்ற கோல்களால் வெற்றி பெற்றது. பின்னர் தென்கொரிய நாட்டுடன் மோதி5-5 என்ற கோல் எண்ணிக்கையில் போட்டியை சமன் செய்தது.

பின்னர் ஜப்பானுடன் மோதி 1-0 என்ற கோல்களால் மன்னார் அணி தோல்வியடைந்தது. பின்னர் நாடுதிரும்பிய அணியினரை மன்னார் மாவட்ட மக்கள் கடந்த 31ஆம் திகதி மன்னார் முருங்கன் சந்தியில் வைத்து மங்கல வாத்திய இசைகள் முழங்க வெடிகள் கொளுத்தி மன்னார் வீதியை ஊர்வலமாக வந்தனர் இறுதியாக மன்னார் புனிதசபேரியார் ஆண்கள் தேசியக்கல்லூரியில் பாராட்டு விழாவும் இடம் பெற்றது. இந்நிகழ்விற்கு கல்லூரி முதல்வர் தலைமை தாங்கினார்.


(மி)

## மாவட்டகால்பந்து சுற்றுப் போட்டியில் பள்ளிமுனை புனிதலூசியா அணிக்கு வெற்றி

பள்ளிமுனை புனித லூசியா விளையாட்டுக்கழகம் அகில இலங்கை உதைபந்ததாட்ட சம்மேளத்தின் பிரிவு ஒன்று நடத்திய மாவட்ட சுற்றுப் போட்டியில் கடந்த 30 ஆம் திகதி கொழும்புகந்தானை விளையாட்டுக் கழகத்துடனான போட்டியில்3-1 என்ற கோல்களாலும், மன்னார் விளையாட்டரங்கில் இடம்பெற்ற கொழும்பு மாளிகாவத்தை விளை யாட்டுக்கழகத்திற்கு எதிரான போட்டியில் 2-1 என்ற கோல்களாலும் வெற்றி பெற்றுள்ளது.

(மி)

## சிந்தனைக்கு



இரத்தம் சிந்தி, வியர்வை சிந்தி, கண்ணீர் சிந்தி தாங்கெணாத் துன்பத்தின் பரிசாகப் பெறுவதுதான் சுதந்திரம்.

தமிழீழதேசியத்தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 3-08-2004

மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948


## அனுபவம் மட்டுமே போதும்!

இலங்கையின் சமாதான நடவடிக்கைகள் முன்னெடுப்புச் சம்பந்தமாக சர்வதேச நிபுணர் குழுவின் ஆலோசனையைப் பெறுவதற்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்துள்ளதாக வெளிவரும் தகவல்கள் எமக்குச் சில சந்தேகங்களை ஏற்படுத்துவதாய் உள்ளது.

இதில் முதலாவதாக எழும் சந்தேகமானது சனாதிபதி சந்திரிகா இனப்பிரச்சினை தொடர்பாக அறிந்துள்ளதை விட, சர்வதேச நிபுணர்கள் அறிந்து கொள்ள அதிக வாய்ப்பு உண்டா? என்பது தான். இரண்டாவதாக சர்வதேச நிபுணர்கள் குழு சமாதானநடவடிக்கைகள் தொடர்பாக வழங்கும் ஆலோசனைகள் சனாதிபதி சந்திரிகாவினால் நடைமுறைப்படுத்த முடியுமா? என்பதே ஆகும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சிறிலங்காவின் இரு பிரதமர்களின் புதல்வி. இதுவரையில் சுமார் 10 ஆண்டுகள் வரை சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாக இருந்து வருபவர். இத்தகைய ஒருவர் சமாதான நடவடிக்கைகளுக்கான ஆலோசனைகள் எனச் சர்வதேச நிபுணர்களை அழைப்பதென்பது, சனாதிபதி சந்திரிகாவின் கல்வி, அறிவு, அனுபவம் என்பன குறித்து ஏற்கனவே வெளிவந்த 'பெருமைகளை' மூழ்கடித்துவிடக் கூடியவையாகும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இனப்பிரச்சினை குறித்து விளங்கிக்கொள்ள பெரிதாக ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. தனது தரப்பில், தந்தை, தாய் ஆகியோரின் அரசியல் வரலாற்றைத் தெரிந்து கொண்டாலே போதுமானதாகும். இவர்கள் இருவருமே இன்று இனப்பிரச்சினை இத்தகைய சிக்கல் அடைந்து நெருக்கடி வலுவடையவும் பெரும் பங்காற்றியவர்கள்.

அடுத்ததாக தனது ஒரு தசாப்த பதவிக் காலத்திலேயே சனாதிபதி சந்திரிகாவின் இனப் பிரச்சினையின் கூர்மையையும் அதன் விஸ் தீரணத்தையும் விளங்கிக்கொள்ளப் போதிய வாய்ப்புக் கிடைத் திருக்கும். இவற்றை விடுத்து, அதாவது பிரச்சினையைத் தோற்றி வந்தவர்கள் குறித்து தெளிவான தகவல் பிரச்சினை குறித்து போதிய அனுபவம் என்பவற்றை விடுத்து வெளியில் இருந்து நிபுணர்களை அழைத்து எதனைப் பெற்றுக்கொள்ளப் போகிறார் சனாதிபதி சந்தி ரிகா குமாரதுங்க.

சரி நிபுணர்கள் தெரிவிக்கும் ஆசோசனைகள், சிபாரிசுகள் என்பவற்றை நடைமுறைப்படுத்தக் கூடிய நிலையில் தானும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இருக்கின்றாரா? அவ்வாறானால் சமாதான முயற்சிகள் தொடர்பாக நோர்வே முன்னெடுத்த முயற்சிகளுக்கு அவர் பூரண ஒத்துழைப்பு வழங்க முடியாது போனது ஏன்?

நோர்வே அன்று சமாதான முயற்சிகளில் ஈடுபடுமாறு அழைத்தவர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா. இதைத் தேவைக் கேற்ற இடத்தில் அவர்பெருமையாகப் பேசிக் கொள்வதும் உண்டு. ஆனால் நோர்வே அரசின் சமாதான முயற்சிகள் இன்று முன்னேற்றம் காண முடியுமா? என்றொரு நெருக்கடியான கட்டத்தைத் எட்டியுள்ளது.

இதற்கு நோர்வே அரசோ அன்றி விடுதலைப் புலிகளோ காரணமல்ல. இனப்பிரச்சினைக்கான தொடர்பான இந்த விடயத்தில் ஆட்சியாளர்கள் இடையே காணப்படும் முரண்பாடே காரணமாகும். இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சிகளை நிராகரிக்கும் போக்கு உடையவர்கள் அரசாங்கத்தைத் தீர்மானிக்கும் சக்தி உடையவர்களாக உள்ளமையால் சமாதான முயற்சிகள் முடங்கிப் போயுள்ளன.

இந்நிலையில் சனாதிபதி சந்திரிகா சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக சர்வதேச நிபுணர் குழுவிடம் இருந்து எதனைக் கோரிப் பெறப்போகின்றார்? இனப்பிரச்சினை தொடர்பான தீர்விற்கான ஆலோசனைகளா? அன்றி சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு முட்டுக்கட்டையாகவுள்ள, தமது கூட்டணிக்கு உள்ள முரண்பாட்டை எவ்வாறு தீர்த்துக் கொள்ளலாம் என்பதையா?

ஏனெனில் இனப்பிரச்சினைக்குத் திர்வு காண்பதற்கு தமிழ் மக்களுடன் இணக்கப்பபாட்டிற்கு வருவதற்கு முன் சனாதிபதி சந்திரிகா தமது கூட்டணிக்குள் ஓர் இணக்கப்பாட்டுக்கு வருதல் வேண்டும். இறுதியாக எதிர்கட்சிகளுடனும் இணக்கப்பாட்டிற்கு வருதல் வேண்டும்.

இதனால் இன்று சமாதான நடவடிக்கைகளுக்கான முன்னெடுப்புக்களுக்குச் சர்வதேச நிபுணர்கள் குழுவை அழைப்பதற்கு முன்னர் மேற்கூறப்பட்ட முரண்பாடுகளைத் தீர்மானிக்க சர்வதேச நிபுணர்கள் குழுவை அழைத்தல் பொருத்தப்பாடானதாக இருக்கும். ஏனெனில் இம்முரண்பாடு தீர்க்கப்பட்டாலே இனப்பிரச்சினைக்கான சமாதான நடவடிக்கைக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுதல் சாத்தியமானதாகும்.

# சமாதான முன்னெடுப்புக்கள் தாமதத்தால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## ஐ.தே.க.தேசிய அமைப்பாளர் எஸ்.பி.திஸாநாயக்க

(கொழும்பு)

அரசாங்கம் சமாதான முன்னெடுப்புகளை உரிய முறையில் முன்னெடுக்காததன் காரணமாகவே நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடக மாநாடு நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற போது கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ். பி திஸா நாயக்க இந்தக் கருத்தை வெளியிட்டார்

சமாதான முயற்சிகள் தொடர்பாக ஜனாதிபதி ஒரு கருத்தையும் அவரின் அரசாங்கத் தரப்பினர் மாற்றுக் கருத்துக்களையும் வெளியிட்டு வருகின்றனர். இதுவே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் குறித்து சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது

கருணா விடயத்தில் அரசாங்கம் நடந்து கொண்ட விதம், பம்பலப்பிட்டி துப்பாக்கிச் சூட்டு விவகாரம் என்பன இதற்கு உதாரணங்களாகும எனக் குறிப்பிட்ட எஸ்.பி திஸாநாயக்க,

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பாதுகாப்பிற்கான அச்ச நிலையை போக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்

சமாதானம் குறித்து சனாதிபதியின் உண்மையான வெளிப்பாடு நடைமுறைப்படுத்தப்படுமானால் அதற்கு எதிர்கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் எஸ். பி திஸாநாயக்க தெரிவித்தார்

தாம் விவசாய அமைச்சராக இருந்தபோது ஊழல்கள் இடம் பெற்றதாக கூறிய மக்கள் விடுதலை முன்னணியின் அமைச்சரான அநுர குமார திஸாநாயக்க, தற்சமயம் சுமார் 15 வாகனங்களைப் பயன்படுத்தி வருகிறார்,

விவசாயிகளிடமிருந்து நேரடியாக 16ரூபா 50சதம் வீதம் நெல்லை அரச விவசாயசேவை மத்திய நிலையங்களூடாகக் கொள்வனவு செய்ய வேண்டும்.

தற்போதுள்ள வாழ்க்கைச் செலவில் ஒரு கிலோ நெல்லை உற்பத்தி செய்ய பதினைந்து ரூபா செலவாகிறது. எனவே நெல்லை 16ரூபா 50 சதத்திற்குக் கொள்வனவு செய்யாவிடின் கொள்வனவு விலை பத்து ரூபாவிற்குச் சென்றுவிடும்.

எனவே இவ்வாறு கொள்வனவு செய்யாவிடின் விவசாயிகளின் நிலை பல்வேறு நெருக்கடிக்குள் சென்றுவிடும். அவர்களின் பொருளாதாரத்திலும் பாதிப்பேற்படுமெனக் கூறினார். (32)

# தேசிய பாதுகாப்பு தொடர்பாக பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது

## பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

தேசிய பாதுகாப்புத் தொடர்பாக தற்போது பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறும் போது நாட்டின் பாதுகாப்பில் பல்வேறு சிக்கல்கள் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன.

சமாதானப் பேச்சுவார்த்தை நாட்கள் குறிப்பிடப்படாமல் செல்கின்றது.

இதனால், தினந்தோறும் யுத்தத்தை நோக்கிச் செல்லும் அபாய நிலை உருவாகியுள்ளது. இதே வேளை, சர்வதேச நிதி உதவி கிடைக்காத நிலையும் தோன்றியுள்ளது எனவும் கூறியுள்ளார்.

## -இடைக்கால நிர்வாக சபைக்கு எதிராக-

# அனைத்து சக்திகளும் திரட்டப்படும் ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக சபைக்கு எதிராக இந்த நாட்டில் உள்ள அனைத்து சக்திகளையும் ஒன்று திரட்டவுள்ளதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இடைக்கால நிர்வாக சபை என்பது தனியான ஈழ அரசு ஒன்றை உருவாக்குவதற்கான அடித்தளத்தை உருவாக்கிக் கொள்வதற்காக முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கையாகும் எனவும், ஜாதிகஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் அத்துரலிய ரத்தின தேரர் தெரிவித்துள்ளார்.

பேருவளைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற ஜாதிக ஹெல உறுமயவின் அமைப்பாளர்கள் கூட்டத்தில் உரையாற்றுகையில் அத்துரலிய ரத்தின தேரர் இந்தக் கருத்தை தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு இலங்கைக்கு அழுத்தத்தைக் கொடுக்க எந்தவொரு வெளிநாட்டிற்கும் உரிமை இல்லை எனவும் அவர் தெரிவித்தார். இடைக்கால நிர்வாக சபையை அடிப்படையாகக் கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு அரசாங்கத்திற்கு எந்தவொரு உரிமையும் இல்லை எனவும் ஜாதிக ஹெல உறுமய ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (32)

# உத்தியோகபூர்வ வாகனங்களை திருப்பி ஒப்படைக்கவில்லை

## -முன்னாள் அமைச்சர் மீது வழக்கு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ஒருவர் உபயோகித்த வாகனங்கள் திருப்பி ஒப்படைக்கப்பட வில்லையென நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சரான மகிந்த விஜயசேகர உபயோகித்த மீன்பிடி நீரியல் வள அமைச்சுக்குச் சொந்தமான இரண்டு வாகனங்களே இன்னமும் திருப்பி ஒப்படைக்கப் படவில்லையென வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் இது தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்போதைய அமைச்சர் சந்திரசேன விஜேசிங்காவின் ஆலோசனையின் பேரில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் இரண்டு வாகனங்கள் காணாமற்போன விடயம் புலனாகியது. இவ் வாகனங்கள் மாத்தறையில் ஒரு கராஜ்ஜில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கபபட்டதாக பொலிசாா கூறியுள்ளனர்.

# புளொட் மோகன் கொலை தொடர்பில் துப்பறிய மட்டு.விற்கு விசேட குழு

## சிறிலங்கா பொலீஸ்மா அதிபர் தெரிவிப்பு-

சனிக்கிழமை இடம்பெற்ற புளொட் மோகன் கொலைச்சம்பவத்தின் சந்தேகநபர் தொடர்பாக துப்பறிய ஒரு விசேட பொலிஸ் குழுவினர் மட்டக்களப்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்கள் பொலிஸ்மா அதிபர் இந்திராடி சில்வாவினால் ஞாயிற்றுக்கிழமை அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். ஆனால் இச்சம்பவம் நடைபெற்றதும் சந்தேகநபர் உடனடியாக கொழும்பில் தனது விடுதியைவிட்டு வெளியேறி விட்டதாக பொலிசார் கூறுகின்றனர். இச்சந்தேகநபர் 29 ஆம் திகதி மட்டக்களப்பிலிருந்து கொழும்பிற்குப் புறப்பட்டு அன்றையதினம் பிற்பகல் 6 மணியளவில் மேற்படி விடுதியை வந்தடைந்ததாக விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

## துப்பாக்கிச் சூட்டில் படுகாயம்

(கொழும்பு)

மத்துகம ஐக்கிய சுதந்திர முன்னணிப் பிரதேசசபை உறுப்பினர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்துள்ளார். கலை நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு விட்டு வீடு திரும்புகையில் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்த அவர் நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# வல்வைப் படுகொலை நினைவாக

# தீருவில் மைதானத்தில் நினைவுத்தூபி

1989ஆம் ஆண்டு வல்வெட்டித்துறை இந்திய அமைதிப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 63 அப்பாவிப் பொதுமக்களது ஞாபகார்த்த நினைவுத்தூபி நேற்று வல்வை, தீருவில் மைதானப் பகுதியில் திரைநீக்கஞ் செய்து வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கடற்புலிகளின் மகளிர் தளபதி செல்வி. மதிவதனி நினைவுத்தூபியை திரைநீக்கம் செய்து வைத்தார்.

வல்வை விளையாட்டுக் கழகத்தின் தலைவர் மு.தங்கவேல் தலைமையில் பிற்பகல்3மணிக்கு ஆரம்பமான நினைவு தின நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பருதி ஏற்றி வைத்தார். பொதுச்சுடரை வடமராட்சி கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.தயா ஏற்றிவைக்க, உயிரிழந்த பொதுமக்களுக்கான ஈகச்சுடரை உறவினர் ஏற்றிவைக்க மலர்மாலையை கடற்புலிகளின் அரசி யல்துறைப் பொறுப்பாளர் செல்வி. பூரணி ஏற்றிவைத்தார்.

இதையடுத்து படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள் ஞாபகார்த்தமாக ஏற்பாடு செய்யப்பட்ட உதைபந்தாட்ட போட்டி தீருவில் மைதானத்தில் இடம் பெற்றது.

உதயசூரியன் உதைபந்தாட்ட அணி எதிர்த்து விளையாடி இளங்கதிர் உதைபந்தாட்ட அணியை3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. அதைத் தொடர்ந்து இடம் பெற்ற நினைவுதினக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பருதி சிறப்புரையாற்றினார். (27)

## மேஜர் கணேஸ் ஞாபகார்த்தமாக

## சேனையூரில் விளையாட்டுப் போட்டி

(திருகோணமலை)

மேஜர் கணேஸ் ஞாபகார்த்த விளையாட்டுப்போட்டி 2004 மூதூர் கிழக்கு-சேனையூர் மத்திய கல்லூரி மைதானத்தில் இன்றும் நாளையும் நடைபெறவிருக்கின்றது. தமிழீழ விளையாட்டுத்துறையினரால் நடத்தப்படும் இப்போட்டியின் நிறைவு நிகழ்வு புதன் கிழமை நடைபெறும். இதற்கு திருகோணமலை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கே.தீபன் தலைமை வகிக்க உள்ளார். விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் இதில் கலந்துகொள்ளவுள்ளனர். உள்ளூர் விளையாட்டுக்கழகங்கள் பங்கு பற்றும் உதைபந்தாட்டப் போட்டி, உள்ளூர் கழகங்கள் பங்கு பற்றும் கரப்பந்தாட்டப்போட்டி. திருகோணமலை எதிர் கங்குவேலி விளையாட்டுக்கழகம்மோதும் காட்சி கரப்பந்தாட்டப்போட்டி ஆகிய நான்கு பிரிவுகளாக இவ்விளையாட்டுப் போட்டி நடாத்தப்படுகின்றது. (25)

## மூன்று மாதங்களாகியும் பளைக்கு மின்சாரம் இல்லை

பளைப்பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கு எனப்பல மரங்கள் அழிக்கப்பட்டு மின்சார கம்பங்கள் போடப்பட்டு வயர்கள் இணைக்கப்பட்டு மூன்று மாதம் கடந்தும் இன்னும் மின்சாரம் வழங்கப்படவில்லையென இப்பிரதேச மக்கள் கவலையடைகின்றார்கள். இது சம்பந்தமாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் எடுத்து மின்சாரத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் இப்பகுதிமக்கள்வேண்டுகின்றனர். (11)

# இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதி பட்டதாரிகளுக்கு வேலைவழங்குக!

## யாழ். பா.உ கஜேந்திரன் கடிதம்

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகளுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி யாழ்- மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் இலங்கை முகாமைச் சேவைப்பணிப்பாளர் நாயகத்ததிற்குக் கடந்த 31 ஆம் திகதி கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் போரின் தாக்கத்தினால் பல்வேறு நெருக்கடிகளின் மத்தியிலும் மாணவர்கள்கல்விகற்று பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி தமது கல்விசார் துறைகளைப் பூரணப்படுத்தி பட்டமும் பெற்றுள்ளனர்.

பட்டம் பெற்று பல வருடங்களின் பின்பும் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படாமையால் அவர்கள் ஏமாற்றப்பட்டு நம்பிக்கையிழந்த நிலையில் உள்ளனர். மேற்கூறப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த பட்டதாரிகள் முழுமையாக அலட்சியப்படுத்தப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் விடுவிக்கப்படாத பகுதிகளில் உள்ள பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்கானஅவசிய நடவடிக்கைகளை உடன் மேற்கொண்டால் நன்றியுடையவனாக இருப்பேன்.

இவ்வாறு யாழ். மாவட்டப் பாராளுமன்றஉறுப்பினர் செ.கஜேந்திரன் சிறிலங்காவின் முகாமைச் சேவைத்திணைக்களப்பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.(36)

## முல்லை வேலையற்ற பட்டதாரிகள் நாளை அரச அதிபருடன் சந்திப்பு

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியம் தற்போது அரசினால் வழங்கப்பட்ட பட்டதாரிகள் நியமனத்தில் தாம் புறக்கணிக்கப்பட்டது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை நாளை முல்லை அரச அதிபருடன் நடத்த உள்ளதாக அறிவித்துள்ளது.

இந்தக் கலந்துரையாடல் நாளை காலை 7.30 மணிக்கு முல்லை அரச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது மூப்பு அடிப்படையில் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட உள்ளதால் சகல வேலையற்ற பட்டதாரிகளும் தவறாது ஒன்று கூடுமாறு முல்லை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியம் கேட்டுள்ளது

## அளம்பில் திலீபன் மருத்துவமனையில் சிறப்பு மருத்துவ சேவை

அளம்பில் தீயாகதீபம் திலீபன் மருத்துவ சேவையினரின் சிறப்பு மருத்துவ சேவையாக லண்டனில் இருந்து வருகை தந்திருக்கும் மருத்துவக் குழுவினரின் பொது மருத்தவ சிகிச்சை சேவை நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்டு 04.08.2004 வரை நடைபெற இருக்கிறது ஆகவே சிகிச்சை பெற விரும்புவோர் குறிப்பிட்ட தினங்களில் இம் மருத்துவ முகாமில் கலந்து கொண்டு சிகிச்சை பெற முடியும் எனத் தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையினர் அறியத்தருகின்றனர்.

## பாதாளக் குழுவினரிடையே மோதல் துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் படுகாயம்

(கொழும்பு)

கொழும்பு கல்கிசைப் பகுதியில் பாதாள உலகக் கோஷ்டியினருக்கிடையில் நடந்த துப்பாக்கிச் சூட்டினால் நான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர்.நேற்றிரவு ஒன்பது முப்பது மணியளவில் நடந்த இச்சம்பவத்தின்போது படுகாயமடைந்த நால்வரும் கழுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.பாதாள உலகக் கோஷ்டியினருக்கு இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடே இந்தத் துப்பாக்கிச் சூட்டிற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றபோதிலும் இது தொடர்பான மேலதிக விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை. (32)

## கொள்ளுப்பிட்டி குண்டுவெடிப்புத் தொடர்பாக சிறிலங்கா புலனாய்வுத்துறை அறிக்கை சமர்ப்பிப்பு

### ஆட்பதிவு திணைக்களம் மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டியில் கடந்த மாதம் நடைபெற்ற குண்டு வெடிப்புத் தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு மஜிஸ்திரேட் முன்னிலையில் பத்தொன்பது பக்க அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வுத் துறையினரின் இந்த அறிக்கையில், கொள்ளுப்பிட்டியில் நடந்த தற்கொலைக் குண்டுதாரியான ஜெயராணிக்கு உதவியாக வந்தவருக்கு செய்து கொடுக்கப்பட்ட ஆள் அடையாள அட்டையில், ஆட்பதிவுத்திணைக்களத்தில்ஆணையாளர் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ளார் எனக் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை குண்டுதாரிக்கும் அவரது உதவியாளருக்கும் அவசரமாக அடையாள அட்டைகளை இவரது கண்காணிப்பின் பேரிலேயே செய்துகொடுக்கப்பட்டுள்ளதாக தங்களது விசாரணை மூலம் தெரிய வந்துள்ளதாக குற்றப்புலனாய்வுத்துறையினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த காலப் பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் பாதாள உலக கோஷ்டியினருக்கும் இவ்வாறான அடையாள அட்டைகளை வழங்குவதில் ஆட்பதிவுத்திணைக்களம் செயற்பட்டு வந்துள்ளதாகவும் குற்றப்புலனாய்வுத் துறையினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

கொள்ளுப்பிட்டி குண்டுவெடிப்புத்தாக்குதல் நடைபெற்ற பின்னர் ஆட்பதிவுத் திணைக்களத்தைச் சேர்ந்த இருவர் காணாமற் போயுள்ளதாகவும் இவர்கள் தொடர்பாக தாங்கள் விசாரணை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து கொழும்பு பிரதான மஜிஸ்திரேட் நீதிபதி திருமதி சரோஜினி குசலாவிரட்ண கொள்ளுப்பிட்டிக் குண்டு வெடிப்புத் தொடர்பாக கைதுசெய்யப்பட்டநான்கு பேரையும் எதிர்வரும் 14 ஆம் திகதி வரைவிளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.(32)

## கல்விமாணிப் பட்டப்படிப்பு மன்னாரில் சனியன்று ஆரம்பம்

மன்னாரில் கல்விமாணிப்பட்டப் படிப்பு கடந்த சனியன்று முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் 112 பேர் கலந்து கொண்டு பயிற்சியினை ஆரம்பித்தனர். இதில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 40 பேரும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 72 பேரும் பயிற்சி பெறுகின்றனர். இவ்வைபவம் மன்னார் நகர மண்டபத்தில் அன்று காலை பத்து மணிக்கு இடம்பெற்றது.

இதற்கு மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் தலைமை வகித்தார். மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் விஸ்வலிங்கம், தேசிய கல்வி நிறுவக அதிகாரி சுமதி சிதம்பரநாதன், மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ்.இனியவன், வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோர் ஆகியோர் கலந்து கொண்டனர். (மி)

### கிளி...

மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு தெரிவித்த பொழுது இம் மாவட்டப் பட்டதாரிகளின் விடயங்கள் கவனத்தில் எடுக்கப் பட்டுள்ளதெனவும் இன்னும் ஓரிருவாரங்களில் இம் மாவட்ட பட்டதாரிகளின் நியமனப் பட்டியல் பெயர் விபரங்கள் வெளிப பட்டுள்ளதெனக் கூறியுள்ளனரெனவும் தெரிவித்துள்ளார். (சோ,கு)

## மசகெண்ணை விலை உயரின் டீசலின் விலையும் உயரும்

### மத்திய வங்கியின் செயலர்

(கொழும்பு)

உலக சந்தையில் மசகெண்ணையின் விலை பீப்பாவுக்கு 36 அமெரிக்க டொலர்களுக்கு மேல் அதிகரித்தால் உள்ளூரில் டீசலின் விலை லீற்றருக்கு இரண்டு ரூபாவினால் அதிகரிக்கும் என இலங்கை மத்திய வங்கியின் செயலர் பேராசிரியர் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

தற்பொழுது அரசாங்கத்திற்கு டீசலால் லீற்றர் ஒன்றுக்கு 10.50 சதம் நஷ்ரம் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளதுடன் இந்திய நிறுவனம் ஒன்று எண்ணெய் வழங்குவதற்கு முன்வந்துள்ளதாகவும் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

### வேலையற்ற பட்டதாரிகளின்...

செல்ல போராட்டம் நடத்தியோர் அனுமதிக்கவில்லை. இதனால் தனது அலுவலகத்தில் வைத்துப் போராட்டம் நடத்தியோருடன் பேச்சுக்களை நடாத்தும் தனது முயற்சி பயனளிக்காதென அரச அதிபர் கூற, போராட்டம் நடத்தியோர் தமது முடிவை விலக்கிக்கொள்ள மறுத்து விட்டனர்.எனினும் மறியற் போராட்டத்தினை விலக்கிக்கொண்ட பின்னர் ஏற்பாட்டாளர்களுக்கும், அரச அதிபருக்கும் அவரது அலுவலகத்தில் பேச்சுக்கள் இடம்பெற்றன. சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக இடம்பெற்ற இப்பேச்சின் போது தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்றையும் அவர்கள் அரச அதிபரிடம் கையளித்துள்ளனர்.

இதனிடையே போராட்டம் நடத்தியோர் கோரிக்கை தொடர்பாக பதிலளிக்க எதிர்வரும் புதன் கிழமை வரை கால அவகாசம் கோரியுள்ள நிலையில் போராட்டத்தினைப் பிற்போடப் போராட்டம் நடத்தியோர் சம்மதித்துள்ளனர்.எனினும் உறுதியான முடிவு வழங்கப்படாவிடின் செயலகம் உள்ளிட்ட அனைத்துத் திணைக்களங்களையும் செயலிழக்கச் செய்யும் வகையில் போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாக ஏற்பாட்டாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (27,36,33,28)

### புலிகளைச்...

நடந்துகொள்ளும் விதம்போர் நிறுத்த உடன்பாட்டுக்கு எதிரான செயலாகும், எனச் சுட்டிக்காட்டியுள்ள த.குயிலின்பன், எதிர்வரும் காலத்தில் இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெறுமானால், அதனை தாம் அனுமதிக்கப் போவதில்லை எனவும் எச்சரித்துள்ளார்.

இதனை மீறியும் காவல்துறை தரப்பு நடந்து கொள்ளுமாக இருந்தால்.அதன் விளைவு விபரீதமாக அமையும் என்றும் குயிலின்பன் குறிப்பிட்டுள்ளார். (32)

### வேலையற்ற...

மிட்டுப் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருக்கும் வேலையற்ற பட்டதாரிகள் அதற்கெதிராகவே ஹர்த்தாலை நடத்துவதாகத் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக அக்கரைப்பற்று, அட்டாளைச் சேனை, ஒலுவில், நிந்தவூர்,காரைதீவு. சம்மாந்துறை, சாய்ந்த மருது, கல்முனை, பொத்துவில், திருக்கோவில், ஆகிய பிரதேசங்களில் வியாபாரத் தளங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன. (32)

### கைக்...

படவில்லையெனக் கூறப்படுகின்றது.நகரில் அச்சத்தைத் தோற்றுவிக்கும் முயற்சியாகவே இக் குண்டுத்தாக்குதல் நடாத்தப்பட்டிருப்பதாக தெரிவதாக வாழைச் சேனைப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 03ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.